திராவிடன்

V 4 NO 17 30 April 1931

JL
ஊ211, N28KN
N31·4·17
188915

43

KALANILAYAM தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

3 C...

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ ஏப்ரல் ௴ 30௨ [No. 17.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 321
2. அப்பர் (64-கலை-யோகம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 323
3. பிஸாரோ நாடகம் - (அங்கம்-4, களம்-1.) R. B. Sheridan 325
4. சூளாமணி - (இரதநூபுரச் சருக்கம் - 32—45) K. இராமரத்நம் ஐயர் B A. 327
5. யாப்பிலக்கணம் (தொடை - மோனை) 330
6. கம்ப ராமாயணம் (நகர் நீங்கு படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 333
7. தனிப் பாடல்—(நூறுண்டு வாழ்தல்) க. சோமசுந்தரம் பிள்ளை 335
8. அண்டபுராணம் தமிழ் வளர்ப்போர் திறமுரைத்த படலம் T. T. கிருஷ்ணகாந்த முதலியார், M.A. 335
9. வர்த்தமானம் 339

கலாநிலயம்

உண்மையில் உழல்வார் திறம்.

5.

சாஸ்திரமுறைப்படி புறவுலக உண்மைகளை மதித்தறியப் பயில்கின்ற பயிற்சியால் கைகூடும் பயனைத் தூய்மை என்னுஞ் சொல்லால் சென்றவாரம் குறித்தோம். இரசாயனம் கணிதம் ஆதியாய சாஸ்திரங்களுக்கும் தூய்மைக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்குமெனச் சனங்கள் நினைப்பதில்லை. சமயசம்பந்தமான விடயங்களுக்கே தூய்மை உரியதென்று நம்புகின்றனர். ஆனால், மதக்கோட்பாடுகளுக் கிணங்கிய ஒழுக்கத்தூய்மை இருப்பதுபோலவே, மனத்தூய்மை என்பதும் ஒன்று வேறாக இருப்பதற்கியலும். மனத்தூய்மை என்பது, அசுத்தமான விடயங்களைப்பற்றி நினைக்காதிருத்தல் என்பது மாத்திரமன்று; எந்த விடயத்தைப்பற்றியும் அசுத்தமாய் நினைக்காதிருத்தல் என்னும் பொருளையே அது சிறப்பாக ஏற்கும். மற்று; எண்ணத்தின் அசுத்தம் என்றால் என்ன? இல்லாதசில மாயைகளைக்கொண்டு உண்மையைச் சூழ்விக்குமொரு வஞ்சகத்தை எண்ணத்தின் அசுத்தம் என உரைக்கலாம். உளதா யிருப்பது உண்மை; ஒருஉண்மையை அதுஉள்ளபடி காணுதல்எண்ணத்தின் தூய்மையாம். இவ்வாறின்றி, அவ் வுண்மையின்மீது நம்முடைய காமக்குரோதாதிக ளனைய மனோவிகாரங்களைப் பூசினால், அதனை ஒரு மாயையால் மூடுகின்றவராவோம். சாஸ்திரமுறையில் கைதேர்ந்தவர் உண்மையை மாயையால் மூடுதற்கு இடங்கொடார். இத்தகைய மாசுகளை எல்லாம் அறவேநீக்கி உண்மையைத் தூய்மைசெய்வது சாஸ்திரக் கல்வியின் மேன்மைகளிலொன்று ஆதலின், புற உலகத்தினின்று புதுப்புது உண்மைகளைத் திரட்டித்தருவதும் சாஸ்திரம்; திரட்டித்தந்த அவ்வுண்மைகளை நம்மனமானது மாசிலாது மதித்தறியப் பயிற்றுவிப்பதும் இந்தச் சாஸ்திரங்களே.

இவ்வண்ணம் உவப்பதும் காய்வதும் இன்றி விடயங்களின் தாரதரங்களைச் சீர்தூக்கி மதித்தறியும் சாஸ்திரமுறைகளின் பயிற்சியால் நனிமிக அழகிய பயன்கள் விளைகின்றன. முதலாக, தூய்மையடைந்த மனத்தினால் காணப்படும் உண்மை ஒவ்வொன்றும் தனித்தனி தான்தோன்றிகளாய்நில்லாமல் பின்னுள்ள பொதுவிதி ஒன்றினைப் புலப்படுத்தும் சான்றுகளாகின்றன. விடயஉண்மையின் இதயத்தில் ஓர் விதியுண்மையும் வதிந்து கிடப்பதைக் காண்பவராவோம். சாஸ்திரஞன் ஒருவன் ஓர் உண்மையைக் காணும்போது, அவ்வுண்மையானது இவ் வறிவுஉலகத்தின் ஓர் தனித்தோற்றமாக அவனுக்குத் தோன்றாது. காரணகாரியமென்னும் அப் பெருஞ்சங்கிலியின் வளையங்களென்ன ஒவ்வோர் உண்மையும் தொடர்புண்டு இணைந்து பொதுவிதி யொன்றைப் பிணித்துத்தரும். எனினும், தூயதன்மையில் ஓர் உண்மையைப்பற்றிச் சிந்திக்கும்போது, இவ்வுண்மைக்கு முன்னும் பின்னுமாய்த் தொடர்ந்துநிற்கின்ற சில உண்மைகளையும் காட்சிகொள்வதற் கியன்றவ ராகின்றோம். ஆதலின் ஒவ்வொரு உண்மையும் தன்னையே மாத்திரமன்றித் தன்னுடைய ஸ்தானத்தையும் தெரிவித்துக்கொள்

கின்றது. இப்படி ஓர் பொதுவிதியின் மெய்ம்மையைப் புலப்படுத்துந் தன்மையே உண்மைக் குயிரளிக்கும் சாஸ்திரங்களின் மேன்மையாகும். இவைகளின் வாய்மையை உதாரணமொன்று தெளிவிக்கும்:—

மேலே ஒருகல்லை யெறிந்தக்கால் அது மீண்டும் தரையில் வந்து விழுந்துவிடுமென்பது ஒரு உண்மை. ஆயிர மாயிர மாண்டுகளாக இவ்வுண்மையை எல்லாரும் கண்டிருக்கின்றனர். எனினும், மேலிருந்து கீழே ஒரு பொருள் விழுந்தோறும் அவ்வீழ்ச்சியைக் கண்டவர் ஒவ்வொரு வீழ்ச்சியையும் ஒவ்வொரு தனிச் செய்தியாகவே கருதியிருந்தனர். இந்தப் பொருள் மேலிருந்து கீழே விழுந்தது என்பதல்லாமல் அவர்களுக்கு வேறுயாதுந் தோன்றவில்லை. அல்லது இந்தப் பொருளை மேலெறிந்தால் அது கீழ்விழும் என உட்கொண்டவர் ஆயினும் ஆகலாம். மரத்தினின்று பழங்கள் முதிர்ந்து கீழ்விழுவதை எத்தனையோ பலர் எத்தனையோ காலமாய் எத்தனையோ முறை கண்டிருப்பரன்றோ. எனினும், அதுஒவ்வொன்றும் அவர்களுக்கு ஒவ்வோர் தனி நிகழ்ச்சியாகவே தென்பட்டிருத்தல் வேண்டும். பழத்தினது விழுகை ஓர் உண்மை. இந்த உண்மையைத் தூயசிந்தையால் மதிக்காதவரையில் உறுபொருள் ஒன்றும் அவர்உணர்ந்ததில்லையே.பழத்தின் வீழ்ச்சியைப் பார்க்குந்தோறும் அதனோடு தம் விருப்புவெறுப்புக்களைக் கலந்துகொண்டிருப்பர் மாந்தர். விழுந்த இப்பழம் தின்பதற்குரியதென விழைந்திருப்பார் சிலர். விழுந்து அழிந்ததேயென வருந்தியுமிருப்பார் சிலர். இது சாஸ்திர முறையன்றாதலின் தூய்மை சிதைவுற்றது. பழம் ஒன்று விழுந்ததல்லாமல் அவ்வுண்மைக்கு முன்னும் பின்னும் பார்த்து இவ்வுண்மையின் உறுபொருள் யாதெனமதிக்கும் ஆற்றல் பெற்றிலர். உண்மையில் உழல்வதென்பதின் ஒருவகை யிது.

இப்படி ஒருநாள் ஒரு மரத்தினின்று ஒரு பழம் விழுவதைக் கணிதசாஸ்திர நிபுணராகிய ஸர் ஐஸக் ந்யூடன் (Sir Isaac Newton) என்பவர் இருநூற்றைம்பது வருடங்களுக்குமுன் கண்டார். கண்டனும் அப்பழம், அம்மரத்தினின்று விழுந்தது என்பதோடு அவருக்கு அந்நிகழ்ச்சி கழியவில்லை. அன்று அப்பழம் விழுந்த உண்மையானது, எல்லாப்பொருள்களும் மேலிருந்து கீழ்விழும் என்பதினின்று,பூமிக்கு உரிய ஆகர்ஷண சக்தியைப்பற்றி அவர் கண்டுபிடித்த பல பொதுவிதிகளுக்கு வித்தாயது. இங்கு இப்பழம் விழுவது ஒரு தனிச்செய்தி யன்று. இப்பழத்தின் விழுகையும் ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் வீழ்வதும் ஒரே விதியினுள் அடங்கிய உண்மைகளே. அந்தரத்து அகிலகோடிகள் தாழாமல் நிலைநிற்கின்ற சூழ்ச்சியும் இவ்விதியினால் விளங்குகின்றது. இதனின்று வானசாஸ்திரம் பூதசாஸ்திரம் முதலிய சாஸ்திரங்கள் எத்தனைவித துறைகளாகப் பரவி இந்நாள் விரிந்து வருகின்றதென்பது யாவரும் அறிந்ததே.

சாஸ்திரக்கல்வி இன்றையதினம் பலப்பல உண்மைகளைத் தெரிவிக்கின்றது. வஸ்துக்களைப்பற்றியும், சக்திகளைப்பற்றியும் வேண்டிய அளவு உரைக்கும். உயிர் தங்குவதற்கு இடமாகிய உடலைப்பற்றியும் அது அதிகமாக உரைக்கலாம். எனினும் உயிரைப் பற்றி அது ஒன்றும் உரைப்பதில்லை; உரைக்க முயல்வதுமில்லை. உயிரிற்கு அயலாய புற உலகத்தைப் பற்றிமாத்திரம் சோதித்தாற் போதுமென நினைத்திருக்கின்றது. உயிரென்னும்தன்மை, புற உலகத்தை உள்ளுலகத்தோடு இணைக்கு மொ[illegible] புலப்படுகின்றது. இந்த உணர்[illegible] நன்கு விளக்கமாகின்ற வ[illegible] சாஸ்திரங்கள் சாதிப்பதெல்லாம் சிறுபயன் செய்பவைகளேயாகும். ஆன்மாவின் இரகசியம் அறியப்படவேண்டும். அப்பொழுதே கவி இரவீந்திரநாதர் இயம்பியவண்ணம் மெய்ம்மையை எய்தியவராவோம். அது எய்தாதவரையில் உண்மையில் உழன்றிருப்பதல்லால்வேறொன்றும் விளைந்தபடியில்லை. கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என்று தாயுமானவர் அரற்றுவதன் அர்த்தத்தை இதனிற் காணலாம்.

இன்றைக்கோ சாஸ்திரங்கள் (Sciences) பெரும்பாலும் ஆன்மநிலையோடு இகலி நிற்கின்றன. எனினும், ஆன்மநிலைக்கு அடிப்படையான பிரபஞ்சவிடயங்களனைத்தும் உண்மையாயின் சாஸ்திரங்கள் அவைகளோடு இகல்கொள்ள நியாயமில்லையே. சாஸ்திரங்கள் இகலுமேல், பின் அவை சாஸ்திரங்கள் அல்ல; ஏனெனில், சாஸ்திரங்கள் உண்மையினை ஒருபோதும் பகைக்க இயலாது. ஆகையால், மதித்துஅறிவதற்கு வேண்டிய அளவு முழு உண்மையையும் பெற்றிராமையாற்றான் சாஸ்திரங்கள் ஆன்மநிலையோடு இகல்கின்றன என்னல் வேண்டும். அந்தரம் நோக்கில் சாஸ்திரமும் மதமும் பலதிறப்படுவதின்றி ஒன்றொன்றே இருக்க இயலுமெனினும், நடைமுறையில் நல்லமதமென்றும் கெட்டமதமென்றும் பிரிவதுபோல், சாஸ்திரங்களிலும் கெட்ட சாஸ்திரமும் இருக்கலாம் நல்ல சாஸ்திரமும் இருக்கலாம். மதாசாரியர்களின் உயரிய நீதிபோதனைகளை, பின்வருவோர் நிராகரித்துவிடுதல் போலவே, சாஸ்திரங்களது கட்டளையைச் சாஸ்திரஞர்களும் மீறிவிடுவதுண்டு. எனவே, சாஸ்திரஞன் ஒருவன் இதுதான் சாஸ்திரம் என்று கூறிவைப்பதனாலேயே, அதுதான் சாஸ்திரமா யிருக்கவேண்டு மென்ற நிச்சயமில்லை. தான் கண்டுபிடித்த உண்மை இன்னதென்று கூறுதற்குமட்டுமே அவனுக்கு உரிமையுளது; அதுதான் சாஸ்திரம். அந்த உண்மையை ஆதாரமாய் வைத்து அவன் மதித்துரைக்கும் கொள்கைகளோ,—அவை முற்றிலும் வேறு. உண்மை வேறு; அவ்வுண்மைக் குரைக்கு மதிப்புரை வேறு.

நீர்குறைந்த குட்டையில் குளிப்பவர் தம் மாசு நீங்குவதின்றிச். சேற்றையே பூசிவர நேருமாறுபோல், வேண்டிய அளவு உண்மைகளை எய்தப்பெறாமையால் மெய்ம்மை கைகூடாமல் சாஸ்திரங்களுக்கு மயக்கமே மேலிடுகின்றது. 'நான்மறை தேடிக் காணா மெய்ப்பொருள்' என்னக் கடவுளைக் கருதுவதன் தத்துவம் இதனில் அடங்கியிருக்கின்றதென ஒருவாறு நினைக்கலாம். சாஸ்திரங்கள் இதுகாறுங் கண்டுபிடித்திருக்கின்ற உண்மைகள் மெய்ம்மையை எய்துவதற்குப் பயன்படக் கூடியவைகளேயாயினும், அவைபோதா. இன்னும் பலப்பல உண்மைகள் அதிகம் அதிகமாக வேண்டியிருக்கின்றன. சாஸ்திர ஆராய்ச்சிகள் மேன்மேலும் உண்மைகளைத் தெள்ளித்தரலாமாயினும்,பின்னும் எஞ்சிச் சிலநிற்குமென்றே நினைக்கவேண்டியிருக்கின்றது. ஏனெனில், சாஸ்திரங்கள் ஐம்பொறிக்கு இலக்காயவைகளையே பெரும்பாலும் ஆதாரமாகப் பற்றி இருக்கின்றன. மதித்தறிதற்கேற்ற கருவியாய்க் கொள்வதும் மனமொன்றையே. ஐம்பொறிகளுக் கப்பாலாய் மனத்திற்கும் எட்டாமல் நிற்கின்ற பொருளொன்றை எய்துதற்கு வேறு சில உபாயங்களும் வேண்டும். அவ்வுபாயங்களுள் மிகச் சிறந்தது உணர்வின் முதிர்ச்சி. சாஸ்திரங்கள் உண்மையைச் சோதிக்கும்; உணர்வுதான் மெய்ம்மையை எய்தப்பெறும். [illegible]ஸ்திரங்கள் ஒருகோடி ஒன்று கூடிச் சங்கமமாந்து [illegible]லும் 'அன்பு' என்னுமம் மெய்ம்மை இன்ன[illegible] இதன்றுதான் அவைகளால் அறியக்கூடுமோ.

அப்பர்

அப்பரும் அறுபத்தினன்கு கலைகளும்.

24. யோகம்

[304-வது பக்கத் தொடர்ச்சி]

8. இராஜ யோகத்தின் சிறப்பு அங்கங்கள்.

(ii) பிராணயாமம்

மனத்திற்கும் பிராணவாயுவுக்கும் உள்ள சம்பந்தத்தை முன்னரே கண்டோம். காற்றை உட்கொள்ளும்போது அதைச் சலனமற்று நிற்கவைப்போமாயின் தானகவே மனமும் சலனமற்று நிற்கும். சிலவேளை யாதொரு பிரயத்தனமுமின்றி மனவோட்டம் நிற்குமாயின் மூச்சின் ஓட்டம் அடங்கும். இது பலர் அநுபவமன்றோ? ஆதலால் மனம் சீர்திருத்தமாவதற்குப் பிராணவாயுவை உட்கொள்ளலும் நிறுத்தலும் வெளிவிடுதலும் ஒரு முறையாகச் செய்ய வேண்டுமென்பர் மேலோர். இதுவே பிராணயாமத்தின் கருத்தாம்.

பிராணயாமம் மூவகையாய்ப் பிரியும். அதை, ரேசகம் பூரகம் கும்பக மென்பர். முதலில் பிராணவாயுவைச் சாதாரணமானமனிதன் உட்கொள்வதுபோல் 4,5 விநாடி உட்கொண்டு, பிறகு 4,5 விநாடி உள்ளே நிறுத்தி, பிறகு அதே அளவு வெளிவிடுவர். உள்ளே பிராணவாயுவைக் கொள்ளலும், பிறகு அதைநிறுத்தலும், அதன்பின்னர்ச் சுவாசம் வெளிவிடுதலும் கால அளவையில் யாதொரு பேதமும் நேரலாகாது. ஆதலால் மிகவும் குறைந்த அளவைகளில் ஆரம்பித்துப் பின்னர் அரை நிமிஷம், ஒரு நிமிஷம், ஐந்து நிமிஷம், ஒரு நாழிகை, ஒரு முகூர்த்தம், ஒரு ஜாமம், ஒரு நாள் என அளவைகளை ஏற்றிக்கொண்டே யோகாப்பியாசிகள் செல்வர். இவை பழக்கத்தில் வரப் பலவாண்டுகள்செல்லும். அப்படிச்சென்றும் பிழையின்றி முடிவதும் கடினமான காரியமே. இப்பிராணயாமம் சரிவரச் சித்தியாகுமெனில் மரணபய மின்றி உயிர் வாழலாம்.

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

திருமந்திரம்.

கூற்றுவனை யெதிர்ப்பதற்குமாத்திரம் பிராணயாமம் பயன்படுமென்று எண்ணலாகாது. இது ஞான மார்க்கத்திற்கு நேரே துணைசெய்யு மென்பதும் அப்பர் துணிவாம்:—

உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ் செய்திட் டுன்கைத்தந்தா
லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
யமரர்நா டாளாதே யாரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
னருட் கண்ணா னோக்காதா ரல்லாதாரே.

திருவாரூர் - திருத்தாண்டகம் - 1.

எனவே,மூச்சை விடாது பிடித்துவைத்தல் உள்ளத்திலுள்ள பரம்பொருளை அறிந்து ஒழுகப் பயன்படுமென்றும். அடியில் காணப்படும் அப்பர் பாசுரம் மற்றொன்றிலும் பிராணயாமத்தின் அதிசயம் குறிப்பிடுவதுபோல் காணப்படுகிறதால், அதன் பொருளை அறிஞர் ஆராய்க:—

மூர்க்கப் பாம்பு பிடித்தது மூச்சிட
வார்க்கப் பாம்பினைக் கண்ட துணிமதி
பார்க்கப் பாம்பினைப் பற்றும் பழனத்தான்
தார்க்கொண் மாலைச் சடைகரந் திட்டதே.

திருப்பழனம் - திருக்குறுந்தொகை 4.

(iii) பிரத்தியாகாரம் :— திருநாவுக்கரசுநாயனார் "உள்ளக் கிழியின் உரு" வெழுதுவதென்றது ஒரு போக்காய்க் கூறிய மொழியாகும். பிராணவாயுவை ஸ்தம்பனம் செய்து மனதை ஒருவழிப்படுத்திய புருடன் கண்களை மூடிக்கொண்டு உள்ளத்திலே சதா நடனஞ்செய்யும் சபாநாதனைக் காண முயல்வதாம். அவ்வாறு முயல்வதற்கு முன்னர்த் தேகத்திற்கும் தனக்குமுள்ள சம்பந்தம் புளியம்பழத்திற்கும் அதன் ஓட்டுக்கும் உள்ளவாறு பற்றின்றி நிற்கவேண்டும்.

"உலகெது நானரென்ன உற்றுநின் றுணரு மட்டும்
கலகமார் பிறவிமோகம் கங்குல்போல் மூடிநிற்கும்"

ஞானவாசிஷ்டம்.

ஆகையால் உபாதிகளால்வந்திருக்கும் இருளையறுத்துத் தேகத்துடனிருந்தும் தேகசம்பந்தம் உண்மையிற் பற்றாது உள்ளே ஒருபுருடன் நோக்குவானாயின், * அந்தரங்கத்திலுள்ள பரம்பொருளின் அற்புத விசித்திரம் † ஆனந்தமாக விளங்கும். இதை அநுபவிப்பவனுக்கு உணவும் வேண்டா. கேவலமான மூடசுழுத்தியில் அழுந்திக்கிடப்பவன் பசியால் பீடிக்கப் படாதிருப்பதால், இத்தகைய பேரின்ப சுகத்தில் சிறிது வயப்படும்புருடனுக்கு உலகஇன்பமும்,தேகத்தின் அவசியங்களும் கவனத்திற்கே வாரா.

---

* சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக்கனியே !
சிறியார் பெரியார் மனத்தேற லுற்றல்
முந்தித் தொழுவா ரிறவா பிறவார்
முனிகண் முனியே ! யமரர்க் கமரா !
சந்தித் தடமால் வரைபோற் றிரைகள்
தணியா திடறுங் கடலங்கரைமேல்
அந்தித் தலைசெக்கர் வானே யொத்தியா
லணியார் பொழிலஞ்சை களத்தப்பனே.

சுந்தரர்.

† சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறு நின்றாய் போற்றி
யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கைலை மலையானே போற்றி போற்றி

திருக்கயிலாயம் - போற்றித் திருத்தாண்டகம் 6.

பொந்தை பைப்புக்கு நீக்கப் புகுந்திடுந்
தந்தை யைத்தழல் போல்வதோர் மேனியைச்
சிந்தை யைத்தெறி வைத்தெறி வாய்த்ததோ
ரெந்தை யைக்கண்டு கொண்டதென் னுள்ளமே.

உள்ளத் திருக்குறுந்தொகை - 2

பேய்வ னத்தமர் வானைப்பி ரார்த்தித்தார்க்
கீவ னையிமை யோர்முடி தன்னடிச்
சாய்வ னைத்தலை வர்கட மக்குடற்
சீவ னைச்சிவ னைச்சிந் தியார்களே.

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை 6.

திருநாவுக்கரசுநாயனர் தன் மனத்தகத்தேகண்டு † அநுபவித்த பரம்பொருளின் அற்புதம் வெளியிடுவது காண்க.

மெய்ப்பால் வெண்ணீ றணிந்த மேனி யானை
வெண்பளிங்கி னுட்பதித்த சோதி யானை
ஒப்பானை யொப்பிலா வொருவன் றன்னை
யுத்தமனை நித்திலத்தை யுலக மெல்லாம்
வைப்பானைக் களைவானை வருவிப் பானை
வல்வினையேன் மனத்தகத்தே மன்னி னானை
அப்பாலைக் கப்பாலைக் கப்பா லானை
யாரூரிற் கண்டடியே னயர்த்த வாறே $ (4)

பிண்டத்திற் பிறந்ததொரு பொருளை மற்றைப்
பிண்டத்தைப் படைத்தானைப் பெரிய வேதத்
துண்டத்திற் றுணிபொருளைச் சுடுதீ யாகிச்
சுழல்காலாய் நீராகிப் பாரா யிற்றைக்
கண்டத்திற் றீதினஞ் சமுது செய்து
கண்மூன்று படைத்ததொரு கரும்பைப் பாலை
அண்டத்துக் கப்புறத்தார் தமக்கு வித்தை
யாரூரிற் கண்டடியே னயர்த்த வாறே * 5

திருவாரூர் திருத்தாண்டகம்.

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
யுகப்பார் மனத்தேன்று நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கு மேலோர்க்கு மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

திருவாரூர் - திருத்தாண்டகம் 8.

மற்றும்,

உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை
யும்பர்மணி முடிக்கணியை யுண்மை நின்ற
பெருகுநிலைக் குறியாள ரறிவு தன்னைப்
பேணியவந் தணர்க்குமறைப் பொருளைப் பின்னும்
முருகுவிரி நறுமலர்மே லயற்கு மாற்கு
முழுமுதலை மெய்த்தவத்தோர் துணையை வாய்த்த
திருகுகுழ லுமைநங்கை பங்கன் றன்னைச்
செங்காட்டங் குடியதனுட் கண்டே னானே.

திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம் 3.

விடமூக்கப் பாம்பேபோல் சிந்தி நெஞ்சே
வெள்ளேற்றான் றன்றமரைக் கண்டபோது
வடமூக்க மாமுனிவர் போலச் சென்று
மாதவத்தார் மனத்துளார்மழுவாட்செல்வர்
படமூக்கப் பாம்பணையிற் பள்ளியானும்
பங்கயத்தின் மேலயனும் பரவிக் காணாக்
குடமூக்கே குடமூக்கே யென்பீ ராகிற்
கொழுவினைகள் தீர்ந்தரனைக் குறுக லாமே.

பலவகைத் திருத்தாண்டகம் 8.

என்பதும் காண்க.

(iv) தாரணை:-தாரணையாவது ஜீவன், ஜாக்கிரதை சொர்ப்பனம், சுழுத்தி, துரிய மென்னும் நான்கு அவுஸ்தைகளில் முறையேதங்குமிடங்களான, நெற்றி, கண்டம், இருதயம், நாபி யென்னு மிடங்களிலும் அமிர்த கலசத்தின் மேலிடமாகிய கபாலத்திலும் யாதேனும் ஒரு இடத்தைச் சந்ததம் சிந்தித்து நிற்கும் நிலையாம், நிற்பதொத்து நிலையில்லா நெஞ்சத்தைத் தேகத்திற்குத் தாரணிவதுபோல் ஜீவாதார விடங்களிற் பதியவைத்துத் தியானத்திற்கு ஆரம்பிக்கும் நிலையாம். பிரத்தியாகாரத்திலுள்ள அப்பியாசத்தை நிலைநிறுத்த மேல்நடத்தும் யோகாப்பியாசமாகும். இதை அப்பர் கீழ்வரும்பாசுரத்தில் கவனித்தே பாடி யிருப்பாரெனப் புலப்படுகின்றது.

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பா னின்ற
சொற்பதத்தார் சொற்பமதமுங் கடந்து நின்ற
சோலற்கரிய சூழலா யிதுவுன் தன்மை !
நிற்பதொத்து நிலையில்லா நெஞ்சந் தன்னுள்
நிலவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தேங் கடவுளானே.

தனித் திருத்தாண்டகம் 4

சில்லுருவிற் குறியிருத்தி நித்தல் பற்றிச்
செழுங்கணு ணேக்குமிதுவூக்க மற்றுப்
பல்லுருவிற் றொழில் பூண்ட பஞ்ச பூதப்
பளகீரும் வசமன்றே பாரே லெல்லாம்
சொல்லுருவிற் சுடர்மூன்றாய் உருவ மூன்றாய்த்
தூநயன மூன்றாகி யாண்ட வாரூர்
நல்லுருவிற் சிவனடியே யடைவே னும்மா
னமைப்புணேன் கமைத்துநீர் நடமின்களே.

திருவாரூர் - திருத்தாண்டகம் 3.

† உள்ளக்கிழியை நோக்க முயலுங்கால், அது வெகு தூரத்திற்குப் பின்வாங்கி மறைவது அநுபவத்தில் அறியப்படும்.

$ அயர்த்தல்—உழைப்பின் மகிமையன்றே ? யோக சாதனங்களிலுள்ள உழைப்பைக் கணக்கிடக்கூடுமோ?

* தருவினை மருவுங் கங்கை தங்கிய சடைய னெங்கள்
அருவினை யகல நல்கு மண்ணலை யமரர் போற்றும்
திருவினை திருவே கம்பம் செப்பிட வுறைய வல்ல
உருவினை யுருகி யாங்கே யுள்ளத்தா லுகக்கின் றேனே.

திருவேகம்பம் - திருநேரிசை 6.

இவ்வாண்டில் புதிய சந்தாநண்பர்களாய்ச் சேர்ந்திருப்பவர்க்கு 1930-வது ஆண்டு இதழ்கள் வேண்டுமாயின் உடனே வரைதல் நலம். ஆப்லெதர் பைண்ட செய்து தபால் செலவு உள்பட விலை ரூ. 10. வரைந்து பணத்தையும் அனுப்பிவைக்கவும்.

மானேஜர்

பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு

[308-வது பக்கத் தொடர்ச்சி]

நான்காம் அங்கம்

முதற் களம்

ரோலா:—இன்னமும் உன் சஞ்சலம் ஓயாதாயின் இதைக் கேள் ! ரோலா வார்த்தையொன்று சொல்லிவிட்டு அதை நிறைவேற்றாது நின்றானென்பது இதுவரையில் இல்லை யன்றோ! இவ்விடம் விட்டகன்று கோராவி னுயிர்காக்கும் பாக்கியத்தை எனக்கு நீ இன்று மறப்பாயாயின்—எதுவரினும் நானிவ்விடம் விட்டகலேன். பிறகு ரோலா உன்னருகிலேயே வதையுண்பதைக் கண்ணாரக் கண்டு, அங்கே கோராவும் அவள்குழந்தையும் அலறியலறிச் சாவதையும்நன்றாய் எண்ணி, நீயும் கழுமா மேறுவது உனக்குச் சம்மதமாயின் நீ கம்பீரமாய் இங்கேயே இருக்கலாம்.

அலான்ஸோ:—எனக்கு வெறிபிடித்துப் போய் விடும் !

ரோலா:—போய் விடு ! இன்னுமொரு நிமிடம் தாமதம்—எல்லா மிழந்தோம். பொழுது புலர்கின்றது. எனக்காக நீ பயப்படவேண்டா — பிஸாரோவிற்கு நாம் அடங்கித் தாழ்ந்துவிட்டோமெனப் பாவித்து உடன்படிக்கை பேசிக் காலதாமதம் செய்கின்றேன்- இதற்குள் நீ விரைந்துசென்று, பொறுக்கிய படைவீரர்களுடன் அந்தரங்க சுரங்கத்தின்வழியாய்மீண்டு, வேண்டுமாயின் உன் நண்பனை வெற்றியுடன் மீட்டுச் செல்வதுதானே. ஆம்! அப்படித்தான் ! அன்ப, அப்படியே செய்! இதோ, வெறிகொண்டு கதறும் கோராவின்கூக்குரல் உன்காதிற் படவில்லையோ! போ ! போ ! போய்விட்டனையா!

அல்லான்ஸோ:—ரோலா, பரிவுடைய நினது நட்பு என்னைத் தகவிலாத் தீநெறிக்குள் தூண்டுகின்றதே.

ரோலா:—ரோலாவும் மானத்திறம்பிழைக்குமொரு தொழிலுக் குடன்படுவானோ ?

அலான்ஸோ:—ஹா! என்னைக் காக்கும் தெய்வமே.

(அவனைத் தழுவிக்கொள்கிறான்.)

ரோலா:—வெய்ய நின் கண்ணீர் என் கன்னத்தில் விழுகின்றது. போ ! எனக்குரிய ஊதியமும் எய்திவிட்டேன். இனி நீ செல்.

[சன்னியாசி யுடையைக் கழற்றி அலான்ஸோவுக்கு மாட்டுகின்றான்]

இதோ ! முகத்தை மூடிக்கொள் ! கைவிலங்கும் குலுங்காமற் பார்த்துக்கொள், உம்—போ ! கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்.

அலான்ஸோ:—மறுபடி பொழுதுபுலருமுன் சந்திப்போம். அப்போதுதான் தெய்வத்தின் துணை வேண்டும். நீ என்னுடன் மீளவோ—நானும் உன்னுடன் மாளவோ—இமைப்பொழுதில் இங்கு யான் வந்து சேர்வேன்.

(போகின்றான்.)

ரோலா:—(அலான்ஸோ சென்ற திசையே நோக்கிய வண்ணமாய்) அப்பா! அதோ, வெளிவாயிலையும் கடந்துவிட்டான். மிக விரைவிற் றன் கோராவையும் மகவினையும் கட்டித்தழுவுவானன்றோ! கோரா!நீ யெனக்குப் படுபழி இழைத்தனை என்பதை அப்பொழுது பார்ப்பாய். என்னுயுளுள் இதுதான் முதன்முறை நான் ஒருவனை வஞ்சித்தது. இது தவறாயின் மெய்க்கடவுள் என்னை மன்னித் தருளவேண்டும். நாம் மறுபடி சந்திப்போமென்று அலான்ஸோ பொய்யெண்ணம் கொண்டு சென்றிருக்கின்றான்; பாவம்! ஏன்? ஆம், அங்கே (மேலுலகத்தைக் காட்டி) அங்கே மறுபடி — ஒருவரை யொருவர் காண்போம், ஐயமில்லை. இம்மையில் அரைகுறையாய் விட்ட உண்மைநட்பு முற்றுப் பெறுவது மறுமையிலேயே. நல்லது, படுத்துக்கொள்ளுகின்றேன். காவற்காரன் கண்டுவிட்டால் அலான்ஸோவுக்கு இன்னு இடையூறு நேரும்.

(படுத்துக்கொள்கின்றான்)

[எல்விரா வருகின்றாள்.]

எல்விரா:—(தனக்குள்) கூடாது. பிஸாரோ என்னதான் மூர்க்கத் துரோகியாயிருந்தாலும், அதனுடன் இத் திவ்ய வாலிபன்தன் மேலாய அழகினோடு குணநலங்களுந்தான் எத்துணைச் சீரியனவாயினும் மானமிழக்கும் செய்கையொன்றிற்கும் கலங்கிக் குழம்புமென் இதயத்தில் நான் இடங்கொடுக்கலாகாது. இப்பேயினுங்கொடியோன்பிஸாரோவைத் தொலைத்தென் பழி முடித்துவிட்டே மறுவேலை பார்க்கிறேன். இது ஸத்தியம். அலான்ஸோதான் கருவி அதற்கு. ஒரு வேளை, அலான்ஸோ இச்செய்கைக்கு உடன்படாவிடிலோ.........சரி, ஆயினுமென் ! அலான்ஸோ சிறைதப்பி யோடட்டும்.........அதனால், தயங்கித் தவிக்கும் கோராவிற் கவள் நாதனையும்; திக்கற்ற மகவொன்றிற் கதன் தந்தையையும்; இவன் பேராண்மையையே தங்கள் தஞ்சமெனவும், இக் குணசீலனது வீரவளம்வாய்ந்த வடிவமே தாம் வழிபடு விக்கிரகமாகவும் கொண்டாடும் அப் பேதைப்பெருவியருக் கவர்கள் காவற்கடவுளையும் ஒருங்கே மீண்டளித்தேன் என்னும் பேருவகையாயினும் எனதாமன்றோ.

[ரோலா வருகின்றான்]

ரோலா:—ஹ ! நீயார் ? அலான்ஸோ எங்கே ?

அலான்ஸோ:—பறந்துவிட்டான்.

எல்விரா:—பறந்துவிட்டனா !

ரோலா:—ஆம்—அவனைத் தொடரலாகாது.

[அவள் கையை இறுகப் பிடித்துக்கொள்கின்றான்]

மாதே, முறையிலாச் செயலிதைப் பொறுத்தருள்க. உன்னை என் கைநின்று கழலவிட மாட்டேன். இவ்வாறு தாழ்க்கின்ற கண மொவ்வொன்றும் அலான்ஸோவின் உயிரிற்கு உரமூட்டுகின்றது.

எல்விரா:—நன் காவற்சேனைகளைக் கூப்பிட்டாலென்செய்வாய் ?

ரோலா:—எப்படியானு லென்ன? சற்றுக் கால தாமதந்தானே வேண்டும்.

எல்விரா:— இதனுதவியால் யான் மீறிக்கொண்டாலோ? (உடைவாளொன்றை யுருவிக் காட்டுகின்றுள்)

ரோலா:—இதோ மார்பைத் திறந்துவிட்டேன். எனினும் — வாய்ப்பிராணன் போகும் வரையில்— உயிர் துடித்துச் சென்று உடல் விறைக்கின்ற வரையில்—உன்கையை மாத்திரம் விடேன்.

எல்விரா:—விட்டுவிடு – உண்மையாக–நான் காவற் சேவகனையும் கூப்பிடவில்லை — அலான்ஸோவைத் தேடச் சொல்லவுமில்லை—ஸத்தியம்.

ரோலா:—இதோ விட்டுவிட்டேன். உன்னிரு கண்களின் வீரப்பார்வையே மேன்மைக்குக் கரியாய் நிற்கின்றது.

எல்விரா:—உன் பெயரென்ன? ஒளியாமற் சொல். என்னுத்தரவுப்படி காவற்காரன் இவ்விடம் விட்டுப் போய்விட்டான்.

ரோலா:—என் பெயர்—ரோலா.

எல்விரா:—ஹா! பெருவியர் தலைவன்?

ரோலா:—நேற்றுவரையில் அவன்தான். இன்று, ஸ்பானியர் கைப்பட்டு மாய்ந்தவன்.

எல்விரா:—அலான்ஸோமீ துனக்கிருந்த வாஞ்சையோ உன்னை இக்காரியம் செய்யத் தூண்டிற்று?

ரோலா:—அலான்ஸோ என் நண்பன்தான். அவன் பொருட்டு என்னுயிரைத் துரும்பாகவும் மதியேன். எனினும் என்னை இக்காரியத்தில் தூண்டியது நட்பினும் வலிய மற்றோர் நோக்கம்.

எல்விரா:—நட்பல்லாவிடில் இவ்விதம் சுயநயமற்றுத் தன்னையே துறக்கும்படி தூண்டவல்லது வேறு ஒன்றே உளது.

ரோலா:—அது யாதெனில்.........

எல்விரா:—காதலா?

ரோலா:—ஆம்...

எல்விரா:—நன்று—நாமிருவரும் இங்கு ஒரே காரியத்தைக் கருதித்தான் வந்திருக்கிறோம் .நான் உனது நண்பனைக் காப்பாற்றும்பொருட்டே—

ரோலா :—என்ன ! வண்மையுடன் வாய்மையும் வாய்ந்தவோர் மடவாள் கோராவன்றியும், ஒருத்தியுண்டோ!

எல்விரா:—ஆயின், ரோலா—மாதர்களை நீ இத்துணை இழிவாகவோ மதிக்கின்றாய்!

ரோலா:—அப்படியன்று — நீவிர் எங்களைவிடச் சில விஷயங்களில் தாழ்ந்தும் சிற்சில விஷயங்களில் உயர்ந்து மிருக்கின்றீர்.

எல்விரா:—ரோலா! இக்கொடியோன் கூரிய வாளினின்று காப்பாற்றி உன்னை யுன் நாட்டிற்கும், உன் நாட்டிற்கு அமைதியையும், நான் மறுபடி யளிப்பேனுயின்—அப்பொழுது எல்விராவையும் கோராவுடன் சேர்த்துப் பேச நீ கூசுவாயோ!

ரோலா:—எவ்வழியில் எய்துமிது என்பது தெரியாமுன் யாதும் யான் வாய்வழங்கத் துணியமாட்டேன்.

எல்விரா:—இக்கத்தியை எடுத்துக்கொள்.

ரோலா:—எவ்விதம் உபயோகப்படுத்துவது இதை?

எல்விரா:—பாழும் பிஸாரோ படுத்துறங்கும் கூடாரத்திற்கு உன்னை அழைத்துச் செல்வேன். சாதுக்களுக்குச் சனியனுயும்,—உங்கள் இனத்திற்கே நமனுயும்—இந் நாட்டைக் காடாக்கும் அரக்கனுயும் ஓர் பொல்லாப் பிறவி யெடுத்திருக்கு மிவனை—

ரோலா:—உனக்கும் ஏதோ தீங்கிழைத்திருக்கின்றுனல்லவா?

எல்விரா:—செருக்கினுல் நஞ்சூட்டி என்னை எத்துணைப் புறக்கணிக்கலாமோ அத்தனையும்—

ரோலா:—உம், அவனைத் தூக்கத்தில் கொன்றுவிடவேண்டு மென்கின்றாய்!

எல்விரா:—ஏன்? அலான்ஸோவை யவன் விலங்கிட்டுக் கொன்றிருக்க மாட்டானே? கண் தூங்குகின்றவனும் கையிற் றளைபூண் டிருப்பவனும் ஒரே நிலையிற்றனே இருக்கின்றனர். இக்காரியம் செய்யப்புகுவது முற்றிலும் அவனெனக்கிழைத்த வஞ்சனைக் கொடுமைகளுக்காகப் பழிதீர்க்கும்பொருட்டு மாத்திரமே அன்று; பொதுஜன நன்மையையும் தூய நடுநிலையையும் கருதியே பெரும்பாலும் நான் இந் நித்திரைவதைக்குந் துணிந்தேன். விளங்கிற்றோ?

ரோலா:—நன்மைசெய்வதற்குக் கூடத்தீயவழியைக் கடைபிடிக்கக் கடவுள் நமக்கு உரிமை கொடுக்கவில்லையே! துன்மார்க்கத்தில் நன்மைபெறப் பார்ப்பது, காளைமாட்டில் கறவை பழகுவது போலன்றோ!

எல்விரா:—சே! உன்னுட்டோர் நன்மையைப்பற்றி யுனக்கிருக்கும் கருத்து இவ்வளவுதானு! இக் கைகளே—எனதாவியும் உடலும் சற்று நடுங்கினுலும்—கத்தியால் அவன் கன்மார்பைக் குத்தித்தைத்து விடுகின்றன பார்.

ரோலா:—எனின் உனக்கு நாசகாலம் நண்ணியது! பெருவியர்க்காக நீயேன் உயிர்துறக்க வேண்டும்? கத்தியைக் கொடு என்கைகளில்!

எல்விரா:—இந்தா — என்னுடன் வா — ஆனுல் முதலில்—மிகக் கொடுமையேதான்—காவற்காரனை வீழ்த்தித் தீர்க்கவேண்டிய தவசியம்.

ரோலா:—இங்குக் காவல் காத்துநின்ற போர்வீரனையா?

எல்விரா:— அவனைத்தான். இல்லையெனில் உன்னைக் கண்டவுடன் கூக்குரலிட்டுப் படையைக் கூட்டிவிடுவானே.

ரோலா:—போகும்வழியில் அப் போர்ச்சேவகனை நான் குத்தித் தள்ளவேண்டுமோ? உம்—இதோ கத்தியை வாங்கிக்கொள்.

எல்விரா:—ரோலா!

ரோலா:—அச் சேவகன், உண்மையாய், ஓர் புருடன். ஆளுருவம் சுமப்பவர்க ளெல்லாம் புருடர்களாகமாட்டார்கள். பொன்னோ வேண்டான். என் வேண்டுகோள்களுக் கிணங்கான். அவனுடைய நல்லிதயமே அவனுக்கு இலஞ்சமாய்நின்று என்னைச் சிறைச்சாலைக்குள் விட்டது. என்னுட்டினர் நலமுற வாழவேண்டுமாயின் அவனுக்குத் தீங்குயான் கனவிலும் நினையேன்.

எல்விரா:—ஆயின், அவனும் நம்முடன் சேரவேண்டியதுதான். அவனுயிர்க்கு நானே பணயம்.

ரோலா:—இதைமாத்திரம் நீ ஐயமற அறியவேண்டும். நமக் கென்னநேரிடினும் அவ்வீரனது உரோமமொன்றிற்குக் கூட எவ்விதக் கெடுதியும் எய்த யான் இடங்கொடேன்.

(போகின்றார்.)

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[310-வது பக்கத் தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்.

149. நாம நல்லொளி வேனம்பி நங்கையா
ஏம நல்லுல கின்னிழிந் தங்நகைத்
தாம மல்லிகை மாலைச் சயம்பவை
காம வல்லியுங் காமுறத் தோன்றினுள். 32.

நாம நல்ஒளி வேல்-அச்சத்தையுண்டாக்கும்படி நன்றாய் வடித்துச் செய்யப்பட்ட பளபளப்பான வேலையேந்திய, நம்பி - அந்த சலனசடி மன்னனுக்கு, நங்கையாக - சிறந்த பெண்ணுக, அம் நகை - அழகிய பல்வரிசையையும், தாம மல்லிகை மாலை - ஒளி பொருந்திய மல்லிகை மாலையையும் உடைய, சயம்பிரபை - சுயம்பிரபை என்னும் பெயரைக் கொண்டவள், ஏம நல்லுலகின் இழிந்து - பொன்னுலகத்தினின்று இறங்கி, காமவல்லியும் - காமவல்லிக் கொடியைப்போன்ற தெய்வமங்கையரும், காம்உற - விரும்பத்தக்கவளாய், தோன்றினுள் - பிறந்தாள்.

நாம் - அச்சம். வேல்நம்பி நங்கை - அருக்ககீர்த்திக்குத் தங்கையாக, என்றுமாம். ஏமம் - பொன்; இன்பமுமாம். காமவல்லி - தேவலோகத்தில் கற்பகத் தருவைத் தழுவிப்படரும் பென்னிறம் பொலியுமொருகொடி; இங்கு அழகிய பெண்களுக்கு உவமவாகுபெயர். "காமவல்லியும் காமுற" என்றது அவள், பெண்களுங்கண்டு மோகிக்கத்தக்க பேரழகுடையாள் என்பதைக் குறிக்க. 'ஏம நல்லுலகினிழிந்து' என்னும் வினையெச்சத்தைக் 'காமுற' என்னும் வினையெச்சத்தோடு கூட்டுக. இதைச் சயம்பவையின் தொழிலாக்கித் 'தோன்றினுள்' என்னும் வினையோடு முடித்தலும் ஒன்று. 'அன்னகை' என்ற பாடம் பொருட்பேறிலது.

---

150. கங்கை நீரன கான்ற கதிரிளந்
திங்க ளாற்றொழப் பட்டது செக்கர்வான்
மங்கை மார்பிறப் பும்மட மாதரிந்
நங்கை யாற்றொழப் பாடுந வின்றதே. 33.

செக்கர்வான் - (அந்திச்) செவ்வானமும், கங்கை நீர் அன்ன - கங்கா ஜலத்தைப்போல வெண்மையான, கதிர்கான்ற - கிரணங்களை உமிழும், இளம் திங்களால் - பாலசந்திரன் உதித்தலால், தொழப்பட்டது - எல்லாராலும் தொழப்படுகின்றது. (அது போல்), மடம்மாதர் இ நங்கையால் - மெல்லிய அழகு நிரம்பிய இந்த நங்கை பிறத்தலால், மங்கைமார் பிறப்பும் - பெண்பிறப்பென்பதும், தொழப்பாடு - தொழுதற்குரியதாயிற்று என்று, நவின்றதே - யாவராலும் சொல்லப்பட்டது.

'ஞான்ற கதிர்' என்ற பாடம் பொருட்சிறப்போடு மோனைச் சிறப்பின்மையும் உணர்க. மடம்-மென்மை; பெண்களின் குணங்களிலொன்றாகிய அறியாமை', என்றுமாம். மாதர் - அழகு (சூளா - நிகண்டு); காதல், ஆசை, என்றுமாம் (தொல்கா - உரியியல்). தொழப்பாடு - தொழப்படுதல்.

---

151. வண்டு சூழ்மலர் போன்றள கக்கொடி
கொண்டு சூழ்ந்தது குண்டல வாண்முகம்
கெண்டை கண்கிள ரும்புரு வஞ்சிலை
உண்டு கொல்லென வுண்டு மருங்குலே. 34.

குண்டல வாள் முகம் - அவளுடைய குண்டலங்களை அணிந்த ஒளிபொருந்திய முகம், அளகக்கொடி கொண்டு சூழ்ந்து-மயிர்ச்சுருளின் வரிசையால் மேலே சூழப் பெற்று, வண்டு சூழ் மலர் போன்றது - வண்டுகள் வரிசையாகச் சுற்றிய தாமரை மலரை ஒத்தது; கண் கெண்டை- கண்கள் கெண்டைமீன்களைப்போன்றன; கிளரும் புருவம் சிலை - விளங்கும் புருவங்கள் சிலை போன்றன; மருங்குல் - இடை, உண்டு கொல் என - உண்டோ இல்லையோ என்று கண்டார் ஐயப்படும்படியாக, உண்டு - ஒன்றிருந்தது.

அளகம் - நெற்றி மேலுள்ள மயிர்ச்சுருள்.

---

152. காதின் மீதணி கற்பகத் தொத்திணர்
ஊது தேனிற கூன்றி யிருந்தொறும்
போது தேர்முகத் துப்புரு வக்கொடி
நோத லேகொல் நொசிந்துள வாங்களே. 35.

காதின்மீது அணி-காதின் மேலே யணிந்த,கற்பகத் தொத்து - கற்பகப் பூங்கொத்துக்களில், இணர் ஊது-பூந்தாதை உண்ணும், தேன் - வண்டுகள், இறகு ஊன்றி இருந்தொறும் - இறகையூன்றிப் படிந்திருந்த போதெல்லாம், நோதலே கொல் - நோதலினுல் தானோ, போது தேர் முகத்து - தாமரையை உவமையாகத் தேர்ந்து உரைக்கக்கூடிய (அவள்) முகத்தில், புருவக்கொடி - புருவமாகிய கொடிகள், நொசிந்துள வாம்கள்—துவண்டு நெறிந்திருந்தன.

தேன் - வண்டு. ஊதுதல் - உண்ணுதல். இருந்தொறும் - இருக்குந்தொறும். நோதல் - நோதலினுல் மூன்றும்வேற்றுமைத் தொகை. உளவாங்கள் -விகுதிமேல் விகுதி.

---

153. விண்ண ணங்க விழித்துவி ளங்கொளி
மண்ண ணங்குற வேவளர் வெய்திய
பெண்ண ணங்கிது தோன்றிய பின்கொலோ
கண்ண ணங்குறு காரிகை கண்டதே. 36.

விண் அணங்க - விண்ணவரும் (கண்டு கண்கூசி) வருந்தத்தக்க, விளங்கும் ஒளி - விளங்குந் தேககாந்தியோடு, விழித்து - பிறந்து, மண் அணங்க-மண்ணுலகத்தவர் (காமுற்று) விரும்பும்படி, வளர்வு எய்திய-வளர்ந்து பருவமுதிர்ச்சியையுற்ற,பெண் அணங்கு இது - பெண்களுக்குத் தெய்வம் போன்ற இவள், தோன்றிய பின்னே - பிறந்த பின்னரே, கண் - எவருடைய கண்களும், அணங்குறு காரிகை - தெய்வீக அழகென்பதை, கண்டகொலோ - கண்டனவோ.

அணங்கு - (1) வருத்தம், (2) ஆசை, (3) தெய்வம், (4) தெய்வத்தன்மை. காரிகை - அழகு.

---

154 கொங்கை போதரு வான்குமிழ்க் கின்றன
அங்க ராக மணிந்தகை யன்றியும்
நங்கை நாகரி கம்பொறை நாண்மதுத்
தங்கு வார்கொடி யிற்றளர் வித்ததே. 37.

கொங்கை-முலைகள், போதருவான் குமிழ்க்கின்றன- இனி வளர்ந்து மேலெழுவதற்காக முகங்கொண்டு திரண்டு தோன்றி நின்றன; அன்றியும் - அவைகளே அன்றி, அங்கராகம் அணிந்த கை - வாசனைக்கலவையை அவள் மார்பிற் பூசின சேடிமார் கையும், நங்கை நாகரிகம் - அவளுடைய கண்ணோட்டத்தால், பொறை நாள் மது தங்கு - பாரமாகப் புதுத் தேன் பொதிந்த, வார்கொடியின் - நீண்ட பூங்கொம்பைப் போல, தளர்வித்ததே, அவளுடைய இடையைத் தளரச்செய்தது.

நாகரிகம் - கண்ணோட்டம், தாட்சணியம் (திருக்குறள் 580, பரிமேலழகருரை). கைதளர்வித்ததுஎன்க. இடையை, அல்லது அவளை என்று ஒரு சொல் வருவித்துக்கொள்க. தோழிமார் தனக்கு அங்கராகம் பூசுவதற்கு அவள் அவர்களிடத்துத் தாட்சணியத்தால் மறுக்காமல் உடன்பட்டாள் என்க.

---

155. மங்கு ளேய்வரை மன்னவன் றொல்குடி
நங்கை போற்றியென் றேத்தி நறுங்குழல்
மங்கை மார்பலர் காப்ப வளர்ந்துதன்
கொங்கை யாற்சிறி தேகுழை வெய்தினள். 38

நறும் குழல் மங்கைமார் பலர் - நறுமணத்தோடு கூடிய கூந்தலையுடைய பெண்கள் பலர், மங்குல் தோய் வரை - மேகங்கள் வந்து தங்கும் மலைக்கு, மன்னன் - மன்னனாகிய அந்தச் சலனசடியரசனது, தொல்குல நங்கை - பழமையான குலத்திலே உதித்த நங்கையே, போற்றி என்று - நீ, எங்களைக் காப்பாயாக, (அல்லது யாவராலும் நன்றாகக் காப்பாற்றப்படுவாயாக) என்று, ஏத்தி - துதித்து (அல்லது புகழ்ந்து) காப்ப - பாதுகாப்ப, வளர்ந்து - நன்றாக வளர்ந்து, தன் கொங்கையால் - தனது முகங்கொண்டெழுந்த ஸ்தனங்களால், சிறிதே குழைவு எய்தினள்- சற்று மெலிவுற்றாள்.

மங்குல் - ஆகாயமுமாம்.

---

156. வாம வாணெடு நோக்கி மடங்கனி
தூம வார்குழ லாடுவர் வாயிடை
நாம நல்லொளி முள்ளெயி றுள்ளெழு
காம னாளரும் பிற்கடி கொண்டவே. 39.

வாம வாள் - ஒளிபொருந்திய வாளைப்போன்ற, நெடு நோக்கி - நீண்ட கண்களையும், மடம் கனி - மடப்பம் முதிர்ந்த, தூம வார் குழலாள் - நறும்புகையூட்டப்பெற்ற நீண்டகூந்தலையுமுடைய அவளுடைய, துவர் வாயிடை - சிவந்த வாயினகத்தே, நல் ஒளி முள் எயிறு - நல்ல சோபையோடு கூடிய கூர்மையான பற்கள், நாமம் - அச்சத்தை விளைக்கும், காமன் ஆள் - மன்மதன் கணையாகக் கையாளும், உள் எழு அரும்பின் - உள்ளேயிருந்து எழுகின்ற (முல்லை) அரும்பைப்போல, கடிகொண்ட - விளக்கத்தைக் கொண்டு தோன்றின.

'வாமம்' என்பதற்கு அழகென்று பொருளுரைத்து, 'வாம நோக்கி' என்றும் இணைக்கலாம். நோக்கு - (ஆகுபெயர்) கண். மடம் - மென்மை. எயிறு - முதலில் முளைத்த பல் விழுந்து பின்பு எழும்பல். 'காமன் நாள் அரும்பு' என்றும் பிரிக்கலாம். கடி - விளக்கம்.

---

157. மஞ்சு தோய்வரை யாரஞ்சு மாண்பினால்
அஞ்சி லோதிதன் னினைப்பி னகத்தவாய்
விஞ்சை தாம்பணி செய்தல் விரும்பினன்
எஞ்சி லாவகை யாலிணர் கொண்டவே. 40.

அம்சில் ஓதிதன்-அழகிய சில்லென்னும் அணியைக் கொண்ட கூந்தலையுடைய அச் சுயம்பிரபையின், நினைப்பின் அகத்தவாய் - மனத்தினிடத்தே நிலைத்து, விஞ்சைதாம் - மாயவித்தைகள் யாவும், மஞ்சுதோய் வரையார் - மேகங்கள் படியும் மலையில் வாழ்பவர்களாகிய வித்தியாதரர்கள் யாவரும், அஞ்சும் மாண்பினால்-அஞ்சத்தக்க மாட்சிமையோடு, பணி செய்தல்- அவளுக்குக் குற்றேவல் செய்வதை, விரும்பினன் - அவள் தந்தையாகிய சுலனசடி விரும்பினான். (அவ்வளவிலே) எஞ்சிலா வகையால் - யாதொரு குறைவுமில்லாதபடி, இணர் கொண்டவே - அவைகள் அவனிடத்தே பூத்து விளங்கின.

---

158. நங்கை தோன்றிய பின்னகை வேலினாற்
கங்கண் ஞாலம் அமர்ந்தடி மைத்தொழில்
தங்க நீண்முடி யாற்றலை நின்றனர்
வெங்கண் யானை விளங்கொளி வேந்தரே. 41

நங்கை தோன்றியபின் - சலனசடியின் மகளாகச் சுயம்பிரபை தோன்றியபின், நகை வேலினாற்கு - ஒளிரும் வேலைத்தாங்கிய அம்மன்னனுக்கு, அங்கண் ஞாலம் - இந்த இடமகன்ற பூமியிலுள்ளவர்கள், அமர்ந்து - விரும்பி, அடிமைத்தொழில் தங்க - அடிமைத்தொழில் செய்து நிற்கும் வண்ணம், வெங்கண் யானை விளங்கொளி வேந்தர் - கொடிய யானைச் சேனையையும் விளங்கும் வீரப்பிரதாபத்தையுமுடைய மன்னர்கள், நீள் முடியால் - தமதுநீண்ட மகுடமணிந்த தலையால் அவனைப்பணிந்து, தலை நின்றனர் - அவனிட்ட பணியின்படி ஒழுகலாயினர்.

தலை - பணித்தலை என்று வருவித்துரைக்க. விளங்கொளி - கீர்த்தியாகிய வெள்ளொளி, பிரதாபமாகிய செவ்வொளி ஆகிய இரண்டுமாம்.

வேறு.

159. நங்கைதான் வளர்ந்து காம
நறுமுகை துணர வைத்து
மங்கையாம் பிராய மெய்தி
வளரிய நின்ற நாளுள்
பைங்கண்மால் யானை யாற்குப்
பருவம்வந் திறுத்த தென்றாள்
வங்கவாய்ப் பவழச் செவ்வாய்
வயந்தமா திலகை யென்பாள். 42.

நங்கைதான் - அச்சுயம்பிரபை, வளர்ந்து - பெதும்பைப்பருவம் உற்று, காம நறுமுகை - காமவுணர்ச்சியாகிய நல்ல அரும்பு, துணரவைத்து - கொத்துக் கொத்தாக அரும்பவிட்டு, (அப்பருவம் முற்றி மேல்), மங்கையாம் பிராயம் எய்தி - மங்கைப்பருவத்திற்குரிய பதின்மூன்றும்ஆண்டைப் பொருந்தி, வளரிய நின்றநாளுள் - இன்னும் நன்றாய் அழகுமுதிர்ந்து வளரநின்றகாலத்தில் (வசந்தகாலம் வந்ததாக), வங்கவாய்ப் பவழச் செவ்வாய்-கப்பலின் மூலமாய்க் கொணரப்படும் பவளத்தை யொத்த செவந்த வாயையுடைய, வயந்த மாதிலகை - வசந்ததிலகை, என்பாள் - என்னும் பெயரைக்கொண்ட சிலதிப்பெண், பைங்கண்மால் யானையாற்கு - பசிய கண்களையுடைய பெரிய (அல்லது மதங்கொண்ட) யானைச்சேனையையுடைய மன்னனுக்கு, பருவம் வந்து இறுத்தது - வசந்த காலம் வந்து தங்கியது, என்றாள் - என்று தெரிவித்தாள்.

காம நறு முகை - காமக்குறிப்பினவாகிய உறுப்பு வளர்ச்சியும், அங்க வேறுபாடுகளும். பேதைப்பருவம் பதினொருவயதுமுதல் பதின்மூன்று வயதளவும்; மங்கைப்பருவம் அதற்குமேல் பத்தொன்பது வயதளவும். வளரிய-எதிர்காலத்தைக் காட்டும் 'செய்யிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். வங்கவாய் - வாய், ஏழாம் வேற்றுமையுருபு.

---

160. தேங்குலா மலங்கன் மாலைச்
செறிகழல் மன்னர் மன்னன்
பூங்குலாய் விரிந்து சோலைப்
பொழிமதுத் திவலை தூவக்
கோங்கெலாங் கமழ மாட்டாக்
குணமிலார் செல்வ மேபோல்
பாங்கெலாஞ் செம்பொன் பூப்ப
விரிந்தது பருவம் என்றாள். 43.

தேன்குலாவும் - தேன் நிரம்பிய, அலங்கல் மாலை - அசைந்தாடும் பூமாலையையும், செறிகழல் - (காலிற்) கட்டிய வீரக்கழலையும் உடைய, மன்னர் மன்னன் - மன்னருக்கெல்லாம் மன்னனே, "பூ குலாய் விரிந்த - (மரங்கள்) மலர்கள் நிறைந்து மலர்ந்த, சோலை - சோலையிடமெங்கும், பொழிமதுத் திவலை தூவ - பொழியும் தேன்துளிகளைச் சிதற, பாங்கெலாம் - பக்கங்களில், கோங்கு எலாம் - கோங்க மரங்களெல்லாம், குணமிலார் செல்வமே போல் - அன்பு தயை ஈகை முதலிய நற்குணங்களில்லாதவர்களின் செல்வத்தைப் போல, கமழமாட்டா - மணங்கமழாத, செம்பொன் - செம்பொன் போன்ற பூக்களை, பூப்ப - ஈன, பருவம் வந்தது - இளவேனிற்காலம் வந்து பரந்துளது,' என்றாள்.

தேன்குலாம் - தேங்குலாம். குலாம் - குலாவும். மன்னர் மன்னன், அண்மைவிளி யாதலின் ஈறுகெடவில்லை. பூங்குலாய் - பூக்குலாய் (செய்யுள் விகாரம்.) சோலை - சோலைக்கண் (வேற்றுமைத் தொகை.) தூவ - மரங்கள் தூவ, என்று எழுவாய் வருவித்துக் கொள்க; 'சோலை' என்பதை அதிலுள்ள மரங்களுக்கு ஆகுபெயராக்கி இதற்கு எழுவாயாக்கினும் பொருந்தும். கோங்கு - இளவேனிற் காலத்தில் பொன்னிறமான மலர்களைப் பூக்கும் ஒருமரம். இதன் பூக்கள் மணமில்லாதன வென்பதைப் பின்வரும் நைடதச் செய்யுளால் உய்த்துணர்க:—

நீங்கரிய கூலமணி நீண்மறுகு தோறும்
மாங்குயிலின் மென்குதலை மாலைபகர் மாதர்
தேங்கம முயிர்ப்பின்விரை சேர்த்திகள் விற்கும்
கோங்கமலர் சண்பகமென் கோதையினுஞ் சொன்வார்
(நகரப், 18)

161. வேய்ந்திண ரொசிந்த சோலை
வேனிலான் வென்றி யோகைத்
தேந்துணர் கொடுப்ப மூழ்கித்
தேறல்வாய் நெகிழ மாந்தித்
தாந்துணர் துணையோ டாடிச்
சாறுகொண் டேறு மேரார்
மாந்துண ரொசிய வேறி
மதர்த்தன மணிவண் டெல்லாம். 44.

இணர் வேய்ந்து - பூங்கொத்துக்களைத் தாங்கி, ஒசிந்த சோலை - தளர்ந்து தலைசாய்ந்த மரங்கள், வேனிலான் வென்றி ஓகை-மன்மதன் வெற்றி பெறுங் காலம் வந்ததைக் குறித்துண்டான மகிழ்ச்சியால், தேன் துணர் கொடுப்ப - தேன் மிக்க பூங்கொத்துக்களைக் கொடுப்ப வாங்கி, மூழ்கி-அம்மலர்களில் மூழ்கி, தேறல் - தேனை, வாய்நெகிழ மாந்தி - வாயினின்று வழியும்படியாகக் குடித்து, துணர் - அப்பூங்கொத்துக்களிலே, துணையோடு ஆடி - பெண்வண்டுகளுடனே கூடிக் களித்து, ஊறும்சாறு-கொண்டு-உள்ளே ஊறும் தேனைக்கொண்டு, ஏர் ஆர் - அழகு பொருந்திய, மாந்துணர் ஒசிய - மாமரத்தின் பூங்கொத்துக்கள் சாயும்படி, ஏறி - அவற்றின் மேலேறி, மணி வண்டு எல்லாம் - நீலமணியைப் போன்ற வண்டுகளெல்லாம், மதர்த்தன - களித்து மயங்கின.

சோலை - ஆகுபெயர். ஓகை - ஓகையால் (மூன்றும் வேற்றுமைத் தொகை) துணர் மூன்றும் ஓரே பொருளன.

சோலை ஓகையாற் கொடுப்ப, மணிவண்டெல்லாம் மூழ்கிமாந்தி, ஆடி, ஏறிமதர்த்தனஎனக்கூட்டிமுடிக்க.

---

162. கடிமலர்க் கணையி னான்றன்
கழலடி பரவிக் காமர்
படிமலர்த் தும்பி யென்னும்
பாண்படை தொடர்ந்து பாடக்
கொடிவளர் மகளிர் பூங்கட்
குடைந்துநீர் குடிமி னென்று
வடிமலர் வள்ளத் தேந்த
வாய்மடுத் திட்ட வன்றே. 45.

காமர்படி மலர் - அழகுவாய்ந்த மலர்களில், தும்பி என்னும் பாண்படை - வண்டுகளாகிய பாணர்இனம், தொடர்ந்து - வரிசை வரிசையாகத் தொடர்ந்து, கடிமலர்க் கணையினான்றன்-வாசனையுடைய மலர்களாகிய அம்புகளைக் கொண்ட மன்மதனுடைய, கழல் அடி பரவி - வீரக்கழலையணிந்த பாதங்களைத் துதித்து, பாட-பாட, கொடிவளர் மகளிர் -பூத்த கொடிகளாகிய பெண்கள், (அவ்வண்டுகளை அருகழைத்து) பூக் கள்- பொலிவுமிக்க இந்த மதுவை, குடைந்து நீர் குடிமின் என்று - நீங்கள் அமிழ்ந்து குடியுங்கள் என்று சொல்லி, வடிமலர் வள்ளத்து ஏந்த - தேன் வடியும் மலராகிய கிண்ணத்திலேந்திக் கொடுக்க, வாய் மடுத்திட்ட - (அவைகளும்) வாயிற் கொண்டு பருகின. அன்றே - ஈற்றசை.

படை - திரள், கூட்டம். வளர்கொடி - நன்றாய் வளர்ந்து பூத்த கொடிமகளிர்; மலர் வள்ளம் - பண்புத்தொகை. பூக்கள், பூ - பொலிவு.

யாப்பிலக்கணம்

தொடை—மோனை

[312-வது பக்கத்தொடர்ச்சி]

ஒரு செய்யுளின் ஒவ்வோரடியிலும் முதல் நின்ற எழுத்து மீண்டும் அவ்வவ்வடியின்கண் ஒன்று அல்லது பல சீர்களுக்கு முதலாய் வருவது மோனைத் தொடை எனக் கூறினேம். கூறி, முன்னுள் காட்டிய உதாரணங்களில் எல்லாம், எந்த எழுத்து முதலில் நின்றதோ அந்த எழுத்தே மறுபடி மோனையாக வரும்படி அமைத்திருந்தோம். எனினும் சிற்சில போது வேறுசில எழுத்துக்களும் மோனையாக வரலாம். மோனையின் பொருட்டுச் சிற்சில எழுத்துக்களைத் தனித்தனித் தொகுதிகளாகச் சேர்த்திருக்கின்றனர். அவ்வாறு தொகுக்கப்பட்ட தொகுதியுள் உள்ள ஒரு எழுத்து அதே தொகுதியில் உள்ள மற்ற எழுத்துக்களுக்கு மோனையாகலாம். மற்று, ஒரு தொகுதியுள் உள்ள ஒரு எழுத்து வேறு தொகுதியுள் உள்ள எழுத்தொன்றிற்கு மோனை ஆகாது.

இவ்வாறு ஒன்றற்கொன்று மோனையாகும்படி இனவெழுத்துக்களாகத் தொகுக்கப்பட்டிருக்கும் தொகுதிகள் ஆறு இருக்கின்றன:—

1. அ ஆ ஐ ஔ
2. இ ஈ எ ஏ யா } உயிர்.
3. உ ஊ ஒ ஓ

இதனில், யா என்பது உயிர்மெய் யெழுத்தேனும், அது உயிரோடு இனமாகச் சேர்ந்தது.

4. ஞ் ந்
5. ச் த் } மெய்.
6. ம் வ்

ஒரு செய்யுளடியின் முதற்சொல்லின் முதலெழுத்தாய் உயிரெழுத்தும் இருக்கலாம், அல்லது உயிர்மெய்யெழுத்தும் இருக்கலாம். அடிமுதலில் நிற்பது அகர உயிராயின், பின்னொருசீரில் மோனையெழுத்தாக, அந்த அகரமேயேனும் அல்லது ஆகாரமேனும் ஐகாரமேனும் ஔகாரமேனும் வரலாம். அப்படியே அடிமுதலில் நிற்பது ஆகாரமெனின், பின்வருஞ் சீரொன்றில், அந்த ஆகாரமேயேனும், அல்லது அத்தொகுதியிலுள்ள மற்ற மூன்று எழுத்துக்களில் எது ஒன்றேனும் மோனையாக வரலாம். அப்படியே, ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்கும் கொள்க. இவ்வண்ணமே, இரண்டாவது தொகுதியில் உள்ள, இ ஈ எ ஏ யா, என்னும் ஐந்து எழுத்துக்களும் ஒன்றற்கொன்று மோனையாய் அமையும். மூன்றுவது தொகுதியிலுள்ள, உ ஊ ஒ ஓ என்னும் நான்கு எழுத்துக்களும் ஒன்றற்கொன்று மோனையாய் அமையும். ஆனல், அகரத்திற்கு, வேறு தொகுதிகளிலுள்ள இகரமேனும் உகரமேனும் மோனையாக வாரா. அவ்வாறே, ஒரு தொகுதியிலுள்ள எந்த எழுத்திற்கும் வேறு தொகுதியிலுள்ள எந்த எழுத்தும் மோனையாக வராது.

அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

முதல்டியின் முதலில் நிற்பது அ என்னும் உயிர். உயிரெழுத்து உயிரெழுத்தாகவே செய்யுளடியின் முதலிற்றான் நிற்க இயலும். மற்ற விடங்களில், முன்னின்ற மெய்மேல்ஏறியோ, குற்றியலுகரத்தோடு புணர்ந்தோ, உடன்படுமெய் பெற்றோதான் உயிரெழுத்துக்கள் நிற்கக்கூடும் என்பது வெளிப்படை. ஆகையால் இதற்கு மோனை எங்கிருக்கின்றதென்று பார்க்கப்புகும்போது அடியின் நடுவில் உயிரெழுத்தொன்றை அவ்வுயிரெழுத்தின் உருவத்திலேயே தேடிப் பயன்படாது. இந்தச்செய்யுளில் உள்ள சீர் முதற் சொற்களைப் பிரித்தெழுதினல்,

அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

என ஆகும். ஆதலின், முதலடியில் அகரத்திற்கு அகரமே மோனையாய் இரண்டாஞ்சீரில் வந்திருப்பது காண்க. இரண்டாமடியின்முதலிலுள்ள இகரஉயிரிற்கு இகரஉயிரே மோனையாய் இரண்டாஞ் சீர் முதலில் வந்திருக்கின்றது. அங்குக் ககரம் நிற்பதாக நினைக்கலாகாது. கவ்வுலகம் என்பதன்றுவார்த்தை. இலார்க்கு + அவ்வுலகம் = இலார்க் கவ்வுலகம் எனப் புணர்ந்திருக்கின்றதென்பது அறிக. இப்படியே இரண்டாமடியின் முதலில் இருப்பது கி என்னும் எழுத்தானலும், (இலார்க்கு + இவ்வுலகம் = இலார்க் கிவ்வுலகம்) இகர உயிரே உண்மையில் முதல்நிற்கு மெழுத்தென உணர்ந்து, அதற்கு மோனை (உலகம் + இல்லாகி = உலகமில்லாகி) இரண்டாஞ்சீரின் முதலில் அமைவதையும் அறிந்துகொள்க. புணர்ச்சியால் கரந்திருக்கும் உயிரெழுத்தைத் தேர்ந்தெடுத்து மோனையைக் கண்டுகொள்ளப் பயிலவேண்டும்:—

ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை.

[எவ்வகை இடையூறு எய்தினலும் தளராத ஊக்கமுடையாரிடத்துச் செல்வமானது தானே வழிவினவிச் சென்று சேரும்]

இச்செய்யுள் முதலடியில் இருப்பது, ஆ என்னும் உயிர்நெடில். இதற்கு மோனையாக, இரண்டாஞ்சீர் முதலிலும் நான்காஞ்சீர் முதலிலும் அகரம் நிற்கின்றது. சீர்முதற் சொற்களைப் பிரித்து எழுதினல்,

ஆக்கம் அதர்வினய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை

என ஆகும் அன்றே. அகரமும் ஆகாரமும் ஒரு தொகுதியைச் சேர்ந்த இனவெழுத்துக்களாதலால் ஒன்றற்கொன்று மோனையாயின. இரண்டாமடியின் முதலில் வூ என்னும் எழுத்திருப்பதால் அதுகண்டு மயங்கி அவ்வடியில் வேறு வூ இன்மையால் மோனையும் இல்லை யென்று நினைத்தகலல் ஆகாது. இரண்டாமடியின் முதலில் உள்ள சொல் ஊக்கம் என்பது. அந்த ஊகாரம் வகர உடன்படுமெய்யின் மீது ஏறியிருத்தலால் வூஎனக் காணலாயிற்றேயன்றி வேறில்லை. இந்த ஊகாரத்திற்கு மோனையாய் அந்தத் தொகுதியைச் சேர்ந்த உகரம் மற்ற இரண்டு சீர் முதலிலும் நிற்கின்றது. அவ்வடியிலுள்ள எல்லாச் சீர்களின் முதலிலும் மோனையிருத்தலால் இது முற்றுமோனை.

இறைகடிய னென்றுரைக்கு மின்னச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்.

முதலடியில், இகரத்திற்கு மோனையாய் எகரமும் இகரமும், இரண்டாஞ்சீர் மூன்றுஞ்சீர்களில் வந்திருக்கின்றன. இரண்டாமடியில் உகரத்திற்கு மோனையாய், இரண்டாஞ்சீர் முதலில் ஒகரம் வந்திருப்பது காண்க.

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

முதல்டியில், ஐகாரத்திற்கு அகரம் மோனையாய் வந்திருப்பது காண்க.

எவ்வந்தான் யாதேனுந் தீண்டுங்கொ லுள்ளரிக்கு
மௌவியத்திற் காட்செய்யார் மாட்டு.

முதலடியில், எகரத்திற்கு அதன் தொகுதியைச் சேர்ந்த யா என்னும் எழுத்தும், இரண்டாமடியில், ஔகாரத்திற்கு அதன் தொகுதியைச் சேர்ந்த ஆகாரமும் மோனைகளாக வந்திருக்கின்றன.

அடிமுதற் சொல்லின் முதலெழுத்து உயிரெழுத்தாயிருக்குமெனின், புணர்ச்சியால் கரந்திருப்பினும், சீர்முதல் எழுத்தைப்பிரித்து நோக்குங்கால் அதுவும் உயிரெழுத்தா யிருந்தாற்றான் மோனையாகும். அப்படிக்கின்றி,

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்

என்பதன் முதலடியில் இகரம் இருக்க, அதற்கு மூன்றுஞ் சீரின் முதலிலுள்ள சி என்னும் எழுத்திலுள்ள இகரம் மோனையாயிற்றென எண்ணின் அது பிழையாம். மூன்றுஞ்சீர் 'சிறப்பின' என்னும் சொல்; 'இறப்பின' அன்று. ஆதலின் புணர்ச்சியால், அச்சீர் முதலிகரம் ஏறியுள எழுத்தாகாது. எனவே அது மோனையும் ஆகாது.

இனி, அடிமுதற் சொல்லின் முதலெழுத்து உயிர்மெய்யாயின், மோனையாய் வரக்கூடிய எழுத்துக்கள் எவையெனக் கற்போம்.

உயிரும் மெய்யும் சேர்ந்து உயிர்மெய்யெழுத்தாவதால், மோனையாய் வரும்எழுத்தும் உயிரிற்குயிர் மெய்க்குமெய் நேர்நேரே மோனையாகக் கூடியதாயிருத்தல் வேண்டும். ஆதலின் அடிமுதலெழுத்து, க என்பதானல், அது க் + அ, எனச் சேர்ந்திருப்பதால், மோனையாக வரும் உயிர்மெய்யில், ககரமெய்க்குக் ககரமெய்யும், அகர உயிர்க்கு, அகரம் ஆகாரம் ஐகாரம் அல்லது ஔகாரமும் கலந்திருப்பது அவசியம். ஆகையால், ககரத்திற்கு—க கா கை கௌ, என்னும் நான் கெழுத்துக்களில் ஒன்று மோனையாய் வரலாம். அவ்விதமே, கிகரத்திற்கு கி கீ கெ கே, என்னும் நான்கு எழுத்துக்களில் ஒன்று மோனையாக வரலாம். குககரத்திற்கு, கு கூ கொ கோ, என்னும் நான்கெழுத்துக்களில் ஒன்று மோனையாகலாம். எனவே, க என்பதற்கு ப என்னும் எழுத்து மோனையாய் வராது. உயிர்வரையில் மோனை அமைந்திருப்பினும், மெய் வேறு; கி என்பதற்குக் கோ என்பது, மெய்யொன்ருயினும், (உயிரில் இகரத்திற்கு ஓகாம் மோனையன்ருதலின்) மோனையாகாது. இப்படியே பகரவரிசை [illegible] யெழுத்துக்களுக்கும் மோனை [illegible] அறிந்துகொள்க.

புன்னை நறுமலரின் பூந்தா திடையொதுங்குங்
கன்னி யிளமேதிக் காற்குளம்பு-பொன்னுரைத்த
கல்லேய்க்கு நாடன் கவருடப் போயினன்
கோல்லேற்றின் மேலேறிக் கோண்டு.

இதனில், பு—பூ, என முதலடியிலும்; க—கா, என இரண்டாம் அடியிலும்; க—க, என மூன்றுமடியிலும்; கொ—கொ, என நான்காமடியிலும் மோனைகள் அமைந்திருப்பதைக் காண்க.

கோற்றக் கபற்கட் கோடியே யிருவோரு
மோற்றைத் துகிலா லுடைபுனைந்து—மற்றிந்தப்
போற்றுகிலாற் புள்வளைக்கப் போதுவோ மென்று
பற்றகலா வுள்ளம் பரிந்து. [ரைத்தான்

முதலடியின் முதலிலிருக்கின்ற கோ என்னும் உயிர்மெய்யெழுத்திற்கு அவ்வடி மூன்றுஞ்சீர் முதலில் உள்ள கொ என்னும் உயிர்மெய்யெழுத்து மோனை. இரண்டாஞ் சீர் முதலிலுள்ள க மோனையாகாது. கோ என்னும் எழுத்தும் க என்னும் எழுத்தும் மெய்யளவில் ஒன்றினும், கோ என்பதிலுள்ள ஓகர உயிரிற்கு க என்பதிலுள்ள அகரஉயிர் மோனையன்ருதலின், ககரம் கொகரத்திற்கு மோனை எனக் கொள்வதற்கில்லை.

இரண்டாமடியின் முதலில் நிற்கு மெழுத்து மோ என்பதானலும் அடிமுதற் சொல்லின் முதலெழுத்து மொ, அன்று. (இருவோரும் + ஒற்றை) அதனிலுள்ள மகரமெய் முதலடியின் இறுதியோடு சேர்ந்து விட்டால், இவ்வடி முதலில் இருப்பதற் குரியது ஒ என்னும் உயிரே. ஒகரத்திற்கு உகரம் மோனையாகக் கூடுமாகையால் மூன்றுஞ் சீர் முதலில் (துகிலால் + உடை) நிற்கின்ற உகரம் மோனையாயிற்றெனக் கொள்க. இரண்டாஞ் சீர் முதலிலுள்ள துகரத்திலுள்ள உகரமும் மோனையென எண்ணலாகாது. ஏனெனில் 'துகில்' என்பதேசொல். புணர்ச்சியால் தகரத்தின் மீது ஏறியிருக்கின்ற உகரமன்றது அது.

மூன்றுமடியின் முதலில் நிற்கும் போ என்னும் உயிர்மெய்யெழுத்திற்கு, அவ்வடி இரண்டாஞ் சீர் முதலிலுள்ள பு என்னும் எழுத்தும், மூன்றுஞ் சீர் முதலிலுள்ள போ என்னும் எழுத்தும் உயிர்மெய் இரண்டிற்கு மிணங்கியபடி மோனையாய் அமைகின்றன. நான்காமடியில் பகர உயிர்மெய்க்குப் பகர உயிர்மெய்யே மோனையாயிற்று.

உயிர்மெய் யெழுத்துக்களில் ககரம் பகரம் என்னுமிவ்விரு வருக்கங்களை முதலில் காட்டியதற்கு ஓர் காரணம் உளது. ககரமெய்க்குக் ககரமெய்யொன்றேயும், பகரமெய்க்குப் பகர மெய்யொன்றேயும் மோனையாகும். மொழிக்கு முதலாக வரக்கூடிய மற்ற உயிர்மெய் எழுத்துக்களில், முன்காட்டிய, 4, 5, 6-வது தொகுதிகளின்படி வேறு மெய்யெழுத்துக்களும் மோனையாக வரக்கூடும்:—

(5) ஞகாத்திற்கு ஞகரமாத்திரமேயன்றி நகரமும் மோனையாம்.

(4) சகாத்திற்குச் சகரமாத்திரமேயன்றித் தகரமும் மோனையாம்.

(6) மகரத்திற்கு மகரமாத்திரமே யன்றி வகரமும் மோனையாம்.

[illegible] டாத விற்குனித்துப் போங்கு முகிலெங்கும்
[illegible] வம்பு சிதறுமா—லீட்டமாய்க்

188915

காணுக் கண்பரப்புந் தோகை கடும்பழிக்கு
நாணு தயர்த்தார் நமர்.

இதனில், முதலடியில்:—பூ என்னும் முதலெழுத்திற்கு, மூன்றாஞ்சீர் முதலில் போ என்னும் எழுத்து மோனையாக வந்துளது. பூ என்னும் உயிர் மெய்யிலுள்ள, பகரமெய்க்கு, பொ என்னும் உயிர்மெய்யிலுள்ள பகர மெய்யும், ஊ என்னும் உயிரிற்கு, ஓ என்னும் உயிரும் மோனையாதல் காண்க

இரண்டாமடியில்:—தீ என்னும் முதலெழுத்திற்கு மூன்றாஞ்சீர் முதலிலுள்ள சி என்னும் எழுத்து மோனையாயிற்று. தகர மெய்க்குச் சகர மெய்யும் மோனையாகக் கூடும். ஈகார உயிரிற்கு இகரஉயிர் மோனை.

மூன்றாமடியில்:—கா என்னும் முதலெழுத்திற்கு, இரண்டாஞ்சீர் நான்காஞ் சீர்களின் முதலிலுள்ள ககரங்கள் மோனை.

நான்காமடியில்:—நா என்னும் முதலெழுத்திற்கு மூன்றாஞ்சீர் முதலிலுள்ள நகரம் மோனை.

கோதை மடவார்தங் கொங்கை மிசைத்திமிர்ந்த
சீதக் களபச் செழுஞ்சேற்றால்—வீதிவாய்
மானக் கரிவழுக்கு மாவிந்த மென்றளதோர்
ஞானக் கலைவாழ் நகர்.

முதலடியில், கோ—கொ. இரண்டாமடியில் சீ-செ. மூன்றாமடியில் மா—மா. நான்காமடியில் ஞா—ந. மோனைகள் ஆயின.

நிழற்கோப மல்க நிறைமலர்ப்பூங் காயா
சுழற்கலவ மேல்விரித்த தோகை—தழற்குலவு
தீம்புகை யூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார்
யாம்பிரிந்தார்க் கென்னு மினி.

[காயாமலரின் நிழலில் இந்திரகோபப் பூச்சிகள் செறிவதால் விளங்கும் பூக்களையுடைய காயாவினருகே, கலாபம் விரித்தாடும் மயிலானது, தீயிலிருந்துவரும் வாசனைப் புகை யூட்டிக்கொள்ளும் செறிந்த கூந்தலையுடைய மாதர்களைப்போன்றிருக்கின்றது, இந்தக் கார்காலம். என்னைப்பிரிந்துபோயிருக்கின்ற தலைவருக்கு இனி என்ன ஆகுமோ]

முதலடியில், நிகரத்திற்கு நிகரம் மோனையாயிற்று. இரண்டாமடிமுதலிலுள்ள சு கரத்திற்கு மூன்றாஞ்சீர் முதலிலுள்ள தோ மோனையாயிற்று (சகரத்திற்குத் தகரமும், உகரத்திற்கு ஓகாரமும் மோனையாதலின்), நான்காஞ்சீர் முதலிலுள்ள தகரம் மோனையாகாது. ஏனெனில், சு-த, மெய்யளவில் சகரதகரங்கள் மோனையாகுமெனினும், உயிர்களுள், உகரத்திற்கு அகரமீ மோனை யாகாது—மூன்றாமடியில், தீ காரத்திற்குச் செகரம் மோனையாயிற்று.

நான்காம் அடியின் முதலில் இருப்பது, யா என்னும் எழுத்து. யாகாரத்திற்கு, யகரமும் யாகாரமும் மோனைகளாவதுடன், மெய்யுடன் சேராத, இகர ஈகார எகர ஏகார உயிர்களும் மோனைகளாகக்கூடும். ஆதலின் இங்கு இரண்டாஞ்சீர் முதலிலுள்ள எகரமும், மூன்றாஞ்சீர் முதலிலுள்ள இகரமும் யாகாரத்திற்கு மோனைகள் ஆயின. அவ்வடியின் சீர்முதற்சொற்கள் "யாம்பிரிந்தார்க்கு என்னும் இனி" எனப் பிரியும். இது முற்றுமோனை.

மாரனழுங் கம்பெய்யு மான்கணழுங் கம்பெய்யும்
வீரனின்று வாரா விடின்.

இதனில்,முதலடியின்கண், மா விற்கு மாவும் இரண்டாமடியில், வீகாரத்திற்கு விகரமும் மோனைகளாயிருக்கின்றன.

மருத்தகுகோ தாய்நின் வதனத் தொளியைத்
தரித்துளதா லொண்சீர்ச் சசி.

முதலடியில், மகரத்திற்கு வகரமும், இரண்டாமடியில் தகரத்திற்குச் சகரமும் மெய்ம்மாறி மோனையாயினமை காண்க.

அடிமுதல் எழுத்திற்கு மோனையாய்வரும் எழுத்துக்கள் அவ்வடியிலுள்ள ஒரு சீரின் முதலில் நிற்க வேண்டுமென்று இதுகாறுஞ் சொன்னோம். அதுவே சிறப்புடைத்து. ஆயினும், சிற்சில போது, சீரின்முதலாக நிற்காமல், அச்சீரின் நடுவிலுள்ள எழுத்தையும் மோனையாகக் கொள்வதுண்டு.

முகவொளியைப் பாவாய் பெறற்குமுண்ட கத்தோ
டிகலு மதியைய மில்லை.

இதன் முதலடியில் முதலில் உள்ள முகரத்திற்கு, மூன்றாஞ்சீர் இடையிலுள்ளமுகரம் மோனையாயிற்று. இரண்டாமடியில் இகரத்திற்கு இகரம் மோனை.

"நீல மால்வரை தவழ்தரு கதிர்நிலாக் கற்றை"

என்னும் கம்பராமாயண அடியில், அடிமுதல் நின்ற நீ காரத்திற்கு மூன்றாஞ்சீர் இடையில் உள்ள நிகரம் மோனையாயிற்று.

சீர் முதலில் மோனையாகவல்ல எழுத்துக்கள் நிற்காதபோதுதான் சீரினிடையிலேனும் மோனையுளதோவெனக் காணவேண்டும்.

எங்கணு யகற்கினி யாவ தாங்கொலோ

என்னுமடியில், முதலில் நின்ற எகரத்திற்கு மூன்றாஞ்சீர் முதலிலுள்ள யாகாரம் மோனையாகக் கூடுமாகையால், இரண்டாஞ்சீர் இடையில், கி என்பதில் உள்ள இகரத்தை மோனையெனக் கொள்ளவேண்டா.

ஆயுர்வேத வித்வான் V. B. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்ட்கள்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

SADVAIDYASALA NANJANGUD
THE UNITED CONCERN, MADRAS

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய்
கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA NANJANGUD
மதுரை
காஞ்சீபுரம்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[314-வது பக்கத் தொடர்ச்சி]

அன்னைக்கே யமையா தென்னின்
மனைவியின் மகிமை யென்னும்.

அரசினி வைகற் கில்லை என்னக் கேட்டும் அன்றலர்ந்த செந்தாமரையை வென்ற முகத்தினோடும் அடவிக்கேகுவான் புறப்பட்ட இராமன் தன்னையீன்ற அன்னையின்பால் தன்னுயிரனைய மனைவியின்பால் விடைகொள்ளுங் கருத்தினனாய் முதற்கண் முன்னவள் கோயில் நண்ணி,

குழைக்கின்ற கவரி யின்றிக்
கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத்
தருமம்பின் னிரங்கி யேங்க
மழைக்குன்ற மனையான் மௌலி
கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற வுள்ளத் தன்னாண்
முன்னொரு தமியன் சென்றான்

[மேகங்கள்கவிந்த வொரு மலையையொத்த இராமன் முடியைச்சூட்டிக்கொண்டு தன்முன் வருவான் என்றுமகிழ்ச்சிசிறக்கின்ற மனமுடையவளாய் எதிர்பார்த்திருந்த கோசலைக்கு எதிரில் — (அரச சின்னங்களாய) குழைக்கின்ற சாமரையும் இல்லாமல், வெண்கொற்றக் குடையும் இல்லாமல், (இவ்வனவாசத்தை) செய்துவைக்கின்ற இராவணாதியர்கள் விதியே வழிகாட்டி முன் செல்லவும், (தன்னை நிலைநிறுத்துவதற்காக இப்படி இவன் வருந்தவேண்டி யிருக்கின்றதே என்று) தருமம் அவனுக்குப்பின் இரங்கி ஏங்கவும்—தனிமையனாய் வந்து சேர்ந்தான்]

விரிந்திடு தீவினை செய்த வெவ்விய தீவினையால் அவதரித்தவன் இராமன் என்றும், இவன் பிறந்த காரியத்தை நிறைவேற்றும்பொருட்டு, இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள், என்றும் இராமாயணத்தின் உள்ளுறை கருமத்தை அறிவுறுத்தி வருகின்ற கம்பர் இங்கு அவ்விராவணாதியர்களது விதியே இராமனைத் தனக்குத்துணையாய் அழைத்தேகுகின்றதென அழகியதோர் உருவத்தை அமைத்துப் பாடுகின்றார். மெய்வலி யரக்கனவன் தன் ஆற்றலால் விதியையும் உப்பக்கங் கண்டிருந்தனன். விதியின் வலியொன்றும் அவன்பாற் செல்லவில்லை. ஆதலின் அது இன்று இராமன்றன் னுதவியை நாடிப் பெற்றது. தாடகையைக் கொல்ல முன் கோசிகமுனிவனையும், வாலியைக் கொல்ல இனிச் சுக்ரீவனையும் தொடரலாயது போல் இக்காலம் இராவணனது விதியைப் பின் தொடர்ந்து ஏகுகின்றனன் இராமன். இராவணனுக்குப் பின்சென்ற அவன் விதி இப்பொழுது இராமனுக்கு முன் சென்றது. தருமத்தின் செய்தி என்ன? முன் இம்மேன்மகன் மிதிலாநகரம் நண்ணுங்கால், வரம்பில்பேர் அழகினாளை மணஞ்செய்வான் வருகின்றானென்ன மணத்தூது சொல்லப் பீடுடைய நடையுடன் முன்னே சென்றது. அறஞ் செய்த அறத்தாலும் பிறந்தவனிவ் விராமனாதலால், தருமமும் தயரதனைப் போல்,

பெருமகன் என்வயின் பிறக்கச் சீதையாம்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்
அருமகள் நிறைகுணத் தவனி மாதெனும்
ஒருமகள் மணமுங்கண் டுவப்ப உன்னினேன்

என விழைந்திருந்ததுபோலும். அவ்வைபவம் நிகழ்வதின்றி இராமனே தயரதனது வாய்மையையும் தருமத்தின் நிலைமையையும் காக்குமாறு காடுநோக்கி ஏகுகின்றான். அன்னான் பின்னர்த் தயரதன் தன் உயிரையே போக்குவான்; தருமமோ தானே ஏங்கிச் செல்கின்றது. இலக்கிய எல்லையுள் இணையற்ற இவ்வுருவகத்தை இயைக்கவல்லார் கம்பரல்லால் வேறோர் கவி காணக் கிடைப்பரோ.

குழைக்கின்ற கவரியோடும் கொற்றவெண் குடையினோடும் மௌலிகவித்தனன் வரும்வரும் என்று தழைக்கின்ற உள்ளத்தளாய் நின்றவள் சீதை என்ன வான்மீகிமுனிவர் விளம்பியிருக்கக் கம்பர் அந்தச் சொற்களை முதனூலினின்று கைக்கொண்டாரேனும், இடம்மாற்றி அதனைக் கோசலைக்குச் சார்த்திவைத்த பெருமை சாலச் சிறந்தது. அன்பினால் மன்னிய மனைவியென்பாள் ஒருத்தி தன் நாயகன்பால் உண்மையாய உள்ளமுடையளா யிருக்குமோர் தூயநிலையில், நாயகனைக் கண்டவுடன், அவன் இனிதிருந்தனன், அல்லன், என்னுந்தன்மையில் உடன் ஒத்த உவகையோ மற்று என்னெனத் துனுக்கமோ எய்துவாளல்லது, அவன் அரசனாயினனோ ஆகாதொழிந்தனனோ என்னு மிவையனைய புறத்துறு குறிகள் அவள் கண்களுக்குத் தோன்றமாட்டா. உள்ளன்பு இருக்குமிடத்தில் செல்வவேறுபாட்டிற்குரிய சின்னங்கள் இலக்குடைய பொருள்களாகா. ஆகையால்,

"நீர்நுரைபோல் வெண்மை நிறமுள்ளதும் நூறு சலாகைகளை யுடையதுமான குடையின்கீழ்த் தங்களுடைய சுந்தரமான முகம் ஏன் விளங்கவில்லை? நூற்றிதழ்க் கமலத்தை யொத்த திருக்கண்களையுடைய தங்கள் முகம், சந்திரன்போலவும் ஹம்ஸம் போலவும் விளங்கும் வெண்சாமரையால் ஏன் வீசப்படவில்லை? புகழ்வதில்வல்ல ஸ்துதி பாடகர்களும் ஸூதர்களும் மாதர்களும் மனமுவந்து மங்களங்களால் தங்களை ஏன் துதிக்கவில்லை? பட்டாபிஷேகஞ் செய்த தங்களுடைய சிரசில், வேதத்தை நன்குணர்ந்தவர்களான அந்தணர்கள், தேன் தயிர்களை முறைப்படி ஏன் அபிஷேகஞ் செய்யவில்லை? ......புஷ்யாதம் என்ற ஒருவகைத் தேர் நன்றாகச் சிங்காரிக்கப்பட்டு வேகமுள்ள நான்கு குதிரைகள் பூட்டப்பெற்றுத் தங்கள்முன் ஏன் ஓடவில்லை? கறுத்தமேகந் தங்கிய குன்றுபோன்றதும் சகல லட்சணங்களும் பொருந்தியதுமான தங்களுடைய பட்டத்துயானை ஏன் தங்களுடைய பிரயாணத்தில் முன்னே போகவில்லை? அழகிய தோற்றத்தை யுடையீர், வீரர்களால் எத்தப்பட்டதும் பொன்வேலை யமைந்ததுமான சிங்காசனம் முன்னர்ச்செல்லத் தாங்கள் பின் நடக்கக்காணேன்...என்ன காரணம்"

என வான்மீகமுனிவர் சீதையை வினவவைத்தவாறெல்லாம் தானும் வினவவைக்கக் கம்பர் மனங்கொண்டிலர். அரசசின்னங்களில் சீதை அதிகமோகம் வைத்திருந்தாளாவதும், அவை இன்மையைத் தன் நாயகன்பால் கண்டெறிக்கும் குறைகளாய்க் கண்டனள் என்பதும் அவ்வாசகத்தால் அறிந்து கொள்ளல் அருமையன்று. இத்தகைய நாட்டம் மனையாளின்

காதன்மாண்பினை எத்துணைப் பழித்ததாகும் என்பதைக் கலையிற் கனிந்த கம்பரது உள்ளம் எளிதில் உணர்ந்தது. ஆதலின் இம்மொழிகளைச் சீதையின் வாய்நின்று வாங்கிக் கோசலையின் மனத்துள் பெய்தனராய்,

புனைந்திலன் மௌலி குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன் என்கொல் என்னும்
ஐயத்தாள் நளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன்
வணங்கலும் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் இடையூ றுண்டோ
நெடுமுடி புனைதற் கென்றாள்

[கிரீடமோ தரித்திலன்; இவனது தலைமயிரோ தூய்மை வாய்ந்த அபிஷகநீரினால் நனைந்திருக்கவில்லை? என்னவோ இது, எனச்சந்தேகமடைந்த கோசலையின் தாமரைபோன்ற பாதங்களைப் பொன்னாற் செய்த கழலையணிந்த கால்களையுடைய இராமன் வணங்கவும், அவள் அன்பால் நெகிழ்ந்து அவனை வாழ்த்தி, "என்னநினைத்து நீமகுடஞ் சூடாமல் இருக்கின்றாய், அல்லது அதற்கு ஏதேனும் இடையூறு நேர்ந்ததோ" என்றாள்.

என இனிதின் மாற்றிவிடுகின்றார் கம்பர். இவன் வேந்தன் அல்லன் என்னும் வேற்றுமைத் தோற்றம் மனைவிக்குச் சார்விக்கும் அத்துணைப் பழி ஓர் அன்னைக்குச் சார்விக்காது. தன் மகற்குச்செல்வம் சிறக்கின்றதென்னும்உவகை கைம்மிகல் அன்புடைய தாய்மைக்கு அயலாகுமென்ன யாவரும் மதியார். ஆயினும் இராமனே, தன்னையே ஈன்றவோர் அன்னை, பொதுவற வுயர்ந்தவளா யிருத்தல்வேண்டுமென எதிர்பார்த்திரந்தனன். எனின், தன்னைக்கண்டு தழைப்பதல்லால் தன் நெடுமுடியினை நினைத்துக் குழைந்தனளாய் இவ்வளவு வினவியதும், தகவிலதாயிற்றென்னச் சிறிது கொந்து அம்மானவன் "செங்கை கூப்பி, நின்காதற்றிருமகன் பங்கமில் குணத்து எம்பிரதனே துங்கமாமுடி சூடுகின்றான்" என்றான். இவ் விடையினூ டுருவிக்கிடக்கும் மறைபொருள் மிகமிகநுண்ணியது. "நின் அன்பிற்குரிய மகன் யான் ஈண்டுவந்துளேன் என்பதல்லால், யான் நெடுமுடி புனைந்தாலென், புனையாதொழிந்தாலென். மற்று, அன்னாய் நினதன்பு நெடுமுடி யொன்றினையே தொடர்ந்து செல்வதாயின் உனக்குறுபொருள் உரைக்கின்றேன் கேள். பரதன் நெடுமுடி சூடுவான்-அவனே இனி உன் காதல் திருமகனும் ஆவான். யானோ முடியை இழந்ததோடு உன் அன்பையும் இழந்தேன் போலும்" என்னுமோர் இளவசை இதனுள் அடங்கியிருக்கின்றது.

அறிவில் வல்லவள் கோசலை. அவளனைய குலமாதர்க்கு இவ்வொரு சொல்போதும். இராமன் சொல்லிற்கும் குரலிற்கும் உரியபொருளை அக்கணமே உணர்ந்து கொண்டாள். அன்னபடி யாதும் நினைந்திலளாயினும் தன்னுடைய வாய்ச்சொற்களை அவ்வண்ணம் இராமன் ஏன் பொருள்படுத்தினான் என வருந்தினளல்லது அவனுக்கு அரசு வாய்க்கா வருத்தம் அவளுக்கு எவ்வளவும் எழுந்ததில்லை. "இடையூறுண்டோ நெடுமுடி புனைதற்கு" என்ற வினவிற்கு வேண்டியமட்டும் விடையிறுத்தானேயன்றி இராமன் மறுமொழியில் மிகைச்சொல் ஒன்றுகூட வந்திலது. "நெடுமுடி புனைதற்கு இடையூறு யாதுமில்லை. அது நிகழும். ஆனால் புனைபவன் பரதன்" என்றதன்றித் தான்அடவியின்கண் அகலநின்றதை இதுகாறும் வழங்கினானல்லன். ஆதலின்கோசலை மகிழ்ந்தெழுவதேயல்லால் நினைந்துருகி நைவதற்குக் காரணங் கண்டிலள். எனினும் இராமன் தன்னைச் சொல்லாமற்சொல்லிச் சிறிது இடித்துரைத்தனனே என்னும் இரக்கம் அவளது உள்ளத்தை உறுத்திக்கொண்டிருக்கும். எனவே, பரதன் அரசனாவதில் தானடைந்த மகிழ்ச்சியைத் தெரிவிப்பதோடு "நோவ உரைத்தாய் என்னை நீ இராம" என அவனையும் மெல்லெனத் தெழிப்பவளாகி,

முறைமை யன்றென்ப தொன்றுண் டதல்லது
நிறைகு ணத்தவன் நின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்.

[இராம லக்ஷ்மண பரதசத்ருக்கனரிடத்தில் பூண்டிருந்த குற்றமற்ற அன்பில் வேற்றுமையற்றவளாகிய கோசலை, "நீ யிருக்கப் பரதன் அரசனாவது வரன்முறை அன்று என்னும் ஒன்றே கூறுதற்குளது. பரதனோ எல்லா நற்குணங்களும் நிறைந்தவன். உன்னைக்காட்டிலும் நல்லவன். ஒரு குறைவுமில்லாதவன்" என்று கூறினாள்.]

என்று பின்னரு மன்னவ னேவிய
தன்றெ னாமை மகனே யுனக்கறன்
நன்று நும்பிக்கு நானில நீகொடுத்
தொன்றி வாழுதி யூழி பலவென்றாள்

[என்றுகூறி மறுபடியும், "மன்னவன் ஏவியதை மறுக்காதிருத்திலே மகனே, உன் அறத்திற்கு நல்லதாகும். ஆதலின், உன் தம்பிக்கு இப்பூமியை நீ கொடுத்து அவனோடு மனம்பொருந்தி பலவூழிகாலம் வாழ்வாயாக" என ஆசி கூறினாள்.]

"நின்னினும் நல்லன் பரதன்" என்றனள் கோசலை. எவ்வகையில் பரதன் இராமனை விஞ்சினான் என இவள் கருதியிருத்தல் கூடும். வஞ்சனையால் தனதன்னை வாங்கிவைத்த பேராசை நஞ்சமென இப்பரதன் கைவிதிர்த்த தூய்மையனாய் நிற்கும் நாள் பின்னர். அற்றைநாள் இக்கோசலை, வேட்டுவவள்ளல் குகனோடுகூடி, "ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா" எனப் பரதனைப் பாராட்டக் கூடிய தகுதியளாகலாம். எனவே, இன்று உரைத்த இது எதிரதுதழுவிய வாசகமா யிருத்தற்கியலுமெனற்கில்லை. ஆதலான் இராமனின் நல்லன் பரதன் எனக் கைகேசி கழறுதற்குரிய செவ்வி இப்பொழுதே வாய்த்ததாயிருத்தல் வேண்டும். "மைந்த, நான்தான் நாவழுக்கி யொருவாசகங் கூறிவிட்டால், அதனை நீ குற்றமெனப்பாராட்டி என்னை நீ இவ்வண்ணம் உரையாமற் றீராதோ. எல்லா மாதரையும் எல்லாத் தாயரையும்போல் என்னை நீ எண்ணினையே. எண்ணி என் மனத்தைத் தைக்கப் பேசிய இது தகவன்று. குறைவற நிறைந்த குணத்தவனாய பரதன் இவ்வண்ணம் செய்திரான். நின்னினும் நல்லன் அவன்" என்னக் கோசலை கூறியபடியாத லொன்றே இச்சொல்லுக்குப் பொருத்தமுடையதாம்.

தனிப்பாடல்

நூறாண்டு வாழ்தல்

நூறாண்டு சுகமாக வாழும்-விதி
நுவலுகின் றேனதைக் கவனமாய்க் கேளும்
கூறுமியற்கை மாறாதே-வாழக்
கூறும் நலம்பிணிக் கொடுமையே றாதே.

சுத்தமாங் காற்றைச் சுவாசி-மாலைச்
சுடர்வெயில் படவினை யாட்டப்பி யாசி
நித்தமும் தூய்மையை நேசி-கூடா
நீரைமறந்துங் குடியாதே கூசி.

வீட்டி லழுக்குவை யாதே-பகல்
வேளையில் நித்திரை விரும்பிச்செய் யாதே
வேட்டி யழுக்கா யுடாதே-சோம்பி
வீணே யிருந்து பொழுதுவி டாதே.

கடுத்துப் பசித்தபின் உண்பாய்-வெளி
கால்வயி றிருந்திட வுண்ணுதி பண்பாய்
அடுத்தடுத் துண்ணுதல் அஞ்சு-சொன்ன
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

அற்ற தறிந்துண்ணல் வேண்டும்-என்றும்
ஆறுத லாக விருந்துண்ணல் வேண்டும்
செற்றங்கொள் ளாதுண்ணல் வேண்டும்-தந்த
தெய்வத்தைப் போற்றியே உண்டிடல் வேண்டும்

நீரைக் கருக்கியுண் மகனே-நறு
நெய்யை யுருக்கியே யுண்ணுதி மகனே
மோரைப் பெருக்கியுண் மகனே-பொல்லா
மூவகை நோய்களு மணுகாவென் மகனே

எச்சில் மறந்து முண்ணாதே-உணவுக்
கிடையிலே தண்ணீரை யென்று முண்ணாதே
இச்சைப் படியு முண்ணாதே-கால
இயல்புக்கு மாறான வுணவுமுண் ணாதே

வெறியுள்ள மதுவருந் தாதே-பொல்லா
விறண்டி சாராய மிவைபொருந் தாதே
பொறியுள்ள புகையிலை தீதே-வீணே
புத்தி மயங்கி மிக்வருந் தாதே.

மனச் சுத்தமாயிரு மகனே-என்றும்
வஞ்சம் பொறாமை மனத்தில்வை யாதே
கனத்த கருஞ்சொற் கூறாதே-என்றும்
கனிவான மொழியன்றிக் கட்டுரை யாதே

எண்ணை முழுக்கு விடாதே-தயிர்
இரவிலே மறந்தேனுங் கையாற்றொ டாதே
மண்ணிலே தீமை யடாதே-துன்பம்
வந்த பொழுதும் மகிழ்ச்சிவி டாதே

அன்னையைத் தந்தையைப் போற்றி-மகிழ்ந்
தன்பான மொழிகளை அனுதினஞ் சாற்றி
முன்னவன் பாதங்க ளேத்தி-வந்தால்
முட்டின்றி வாழலாம் நூறாண்டு நேர்த்தி

கோபஞ்செய் யாதிரு மகனே-அருள்
கூர்ந்தெவ் வுயிர்க்கு மிரங்குதி மகனே
பாபஞ் செய்யாதிரு மகனே-பாரில்
பண்புடன் நூறாண்டு பயிலுவாய் சுகமே

புண்ணியக் குருநாதா போற்றி-நோய்கள்
பொருந்தாமல் வாழும் விதிகளைச் சாற்றி
எண்ணிய என்மனம் ஆற்றி-அருள்
என்ற மாணுக்கனுக் கிசைத்தனன் தேற்றி.

அண்ட புராணம்

தமிழ் வளர்ப்போர் திறமுரைத்த படலம்.

[306-வது பக்கத் தொடர்ச்சி]

வழக்கின்றி யொன்றுந்தான் இக்காலத்தில் வாய்ப்பதில்லையே. 'கருடநாதன்' என்னும் புனைபெயர் தாங்கிப் பொலிகின்ற எம் நண்பர் ஸ்ரீமான் கிருஷ்ணகாந்த முதலியார் கனாக்கண்டனுப்பியுள அண்டபுராணப் படலத்தைச் சூழ்ந்தொரு சூறாவளி அலைக்கின்றது. இப்படலத்திற்கு உரிமை வேண்டுபவர் இன்னொருவர் இருக்கின்றனர். தஞ்சைவாசியான இவர், தானும் தமிழ்வளர்ப்போர் திறமுரைத்த படலமொன்று கனாக்கண்டதுண்டென்றும், "அக்கனவைத்தான் 'கருடநாதன்' இப்பொழுது களவுகொண்டு தன் கனவாக வெளியிட்டுப் பாரோர் புகழையெல்லாம் தானே வாய்மடுக்க வழிதேடுகின்றவ ராகலாமென்றும், ஆதலின், அதனைத் தான் கண்ணுறுவதன்முன் பிரசுரஞ் செய்தல் எமக் கழகாகாதென்றும் கழறி யோர் கடிதம் விடுத்துளர். இதற்குயாம் அஞ்சவில்லை; 'கருடநாதர்' வரைந்தெமக்கு அனுப்பியுளதை இவருடைய பார்வைக்கு அனுப்புவது தக்கதென்றுந் தோன்றவில்லை. அதனைப்பார்த்து இவர் ஓர் பிரதிவரைந்து வைத்துக்கொண்டு, பிறகு கருடநாதன் தான் தன்கனவைக் களவுசெய்தனர் என இயம்பத்துணிந்தாரெனின் என் செய்வது. யார் கனவை யார் கவர்ந்தனரென்பதை எந்தச் சாக்ஷிகொண்டு நிரூபிக்க முடியும்? நம் இதழ்களில் இப்பொழுது மொழிபெயர்ந்து வருகின்ற 'பிஸாரோ' நாடகத்தின் ஆசிரியரான ஷெரிடன் என்பவர் எழுதிய வோரோர் நாடகம் 'கிரிடிக்' என்பது. அந்நாடகத்தினுள் வருகின்ற நாடக பாத்திரங்களுள் ஒரு நாடகாசிரியனும் உளன். அவன் 'ஆர்மேடா' என்றோர் நாடகம் வரைந்து அதனைச் சில நடிகர்களைக் கொண்டு தன் நண்பர் முன்னிலையில் ஒத்திகையாக (Rehearsal) நடிக்கவைத்து அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்கின்ற வகையில் அக் 'கிரிடிக்' என்னும் நாடகம் அமைந்திருக்கிறது. இப்படி நாடகத்தினுள் நாடகமாய் வருகின்ற அந்த 'ஆர்மேடா' என்னும் நாடகத்தில் "நரகமே எனதான்மாவைப் பற்றிக் கொள்ளினும் கொள்க—நங்காய் நானுன்னை இன்னுங் காதலிக்கின்றேன்" என ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ஒத்தெல்லோ என்பவன் டிஸ்டிமோனாவைக் குறித்துச் சொன்னதொரு அழகிய வாசகம், செருகப்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்ட அந் நண்பர்களில் ஒருவன், "நீ இதனை ஷேக்ஸ்பிய ரிடத்தினின்று திருடினை" என நேரே உரைப்பது தகவன்றென வெண்ணி, "ஆசிரிய, இவ்வாசகத்தை நான் வேறெவ்விடத்திலேயோ கேட்டிருக்கின்ற நினைவு எனக்கிப்பொழுது எழுகின்றது" என நாகரிகத்தொடு நவின்றான். தன் கரவு வெளியாயிற்றெனக்கண்ட அந் நாடகாசிரியன், "ஐய, இருக்கலாம்; ஒருகால் இதனை ஷேக்ஸ்பியர் நாடகமொன்றிற் கண்டிருக்கலாம். ஆயினும், ஒரே கருத்தை நானும் ஷேக்ஸ்பியரும் ஒரே மொழிகளாற் சொல்ல நினைத்தோம். அவர் எனக்கு இரண்டொருநூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கூறினார்.—நான் பின்னர்க் கூறினேன். இதுவலால் வேறில்லை" என அமைதிகாட்டினானென்று ஷெரிடன் நாடகமிதனில் நவிலப்பட்டிருக்கின்றது. ஆதலின், கழறிய வாசகத்திற்கும் வாசகத்திற்கும் உள்ள ஒற்றுமையே இவ்வித அமைதியில் அடங்கிவிடும் போல் தோன்றுமெனின், கனவிற்கும் கனவிற்கும் இடையே இயற்றுதற்கியலாத களவுதான் யாதுளது! எனவே, கிருஷ்ண காந்த முதலியாராவர் கண்ட கனவெனும் நலத்தினை நாமிவர்க்குக் காட்டிக்கொடுக்க இசைந்திலம்.

"ஆசிரியர்"

நோயற்ற : : : : வாழ்வே	ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்	குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம்மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கோண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக் கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பணடிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின் இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனாம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனாம்! இனாம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

விஜய ரக்ஷித கவசம்.

இது ஓர் மஹானின் மந்திர உபதேசத்தினாலும், ஓர் அபூர்வ மூலிகையினாலும் தயாரிக்கப் படுகிறது. இதை அணிபவர்கள் கிரகதோஷம் முதலிய பல துன்பங்களிலிருந்து விடுபடுவதும் தவிர, எவ்வித காரியங்களிலும் வெற்றியடைந்து, ஆரோக்யம், சந்தானம், ஐஸ்வர்யம், தெய்வானுக்கிரகம், மனநிம்மதி இவைகளைப் பெறுகிறார்களென்பதை அனுபவத்தாலறியலாம். வெள்ளிக் கவசம் ரூ 5. தங்கம் ரூ. 15.

விலாசம் :—புரபசர். கா. கோவிந்தாச்சார், மெஜிஷன் &மெஸ் மெரிஸ்ட், 218, தங்கசாலை, மதராஸ்.

Estd. NATIONAL **1906**

INSURANCE COMPANY LIMITED.

Head Office:- **NATIONAL INSURANCE BUILDINGS**
7, Council House St, Calcutta.

PHENOMENAL PROGRESS

Because it
Offers all that is best in Life Assurance on account of
Lowest Premium Rates
Large Bonuses
Liberal Policy Conditions
Sympathetic treatment of Policyholders.
Prompt Settlement of Claims.

Comparatively Considering

This Company's position has not been equalled by any other Indian Life Office.
Agents wanted in unrepresented areas.
For Particulars apply to :—

113, Armenian St, Madras. } **T. ANANTACHARI**, B.A., *Branch Secretary*.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு
நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. **2 0 0**
வெளி நாடு " ரூ. **2 8 0**

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5 வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்றாகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ. **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. சைசாதாரகம் பொடி வீசை ரூபா 3½. டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்குஅணா 4. டஜன் ரூபா 2¼ சைஒரு சேர்டின் ரூபா 1¾ வி பி, ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

கலா நிலயம்

1930 பைண்ட் வால்யூம் மிகச் சிலவே இருக்கின்றன. 1928-வது ஆண்டு இதழ்களை வாங்குவார்க்கன்றி 1929 ஆண்டு இதழ்கள் மாத்திரம் கொடுப்பதற்கியலாது. அவைகளும், இன்னும் பத்துப் புத்தகங்களே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவின் வருக.

விலை:—(தபால் செலவு உள்பட) வால்யூம் ஒன்றிற்கு.

	உள்நாடு	வெளிநாடு
பைண்ட் செய்யாதது	ரூ. 8-0-0	ரூ. 9-8-0
காலிகோ பைண்ட்	9-8-0	11-0-0
ஆப்செதர் பைண்ட்	10-0-0	11-8-0

கலாநிலயம் ஆபீஸ்—புரசைபாக்கம், சென்னை.

அமிர்தகுணபோதினி

இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை
ஒரே ரூபாய் சந்தாவில் 80 பக்கங்கள்.
எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்
நீங்கள் "அமிர்தகுணபோதினி"யைப் பார்த்திருக்கிறீர்களா ?

இதுபோன்ற நவீன மாதாந்திர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாதஸஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரசித்த விகடப்பத்திரிகையாகவும் விளங்குகின்றது. எல்லாம் கருத்து எல்லாம் அநுபவம் எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 80 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை, நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0. மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனாம்.

புரோப்ரைட்டர்
தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

"KALANILAYAM"
VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

பிறர் கைப்பட்ட
சமையலென்ற பழியில்லை

ஆர் கைப்பட்டதோ, ஆர் பார்த்ததோ, ஆர் சமைத்ததோ என்று கூசிச்கூசி உண்ணுமல் விடுபவர்கள் மனரம்மியத்துடன் உணவு உண்ணக்கூடிய வழிகாட்டும் துணை

ருக்மணி
குக்கர்

தாங்கள் தாங்களே வேண்டியபடி, வேண்டும்போது தம் கைகளாலே, தொந்தரவு இல்லாமல் சமைத்துக் கொள்ளலாம். 1, 2, 4, 6, 8, 12, 16, பேர்களுக்கு ஏழு அளவுகளில் ரூ. 12, 16, 20, 25, 31, 37,44-ல் உண்டு. விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பனி,
இராயபுரம் (12) சென்னைப்பட்டினம்,

நம்பிக்கையுள்ள -
- - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம்!

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாத முள்ள இடம்இதுவே.

விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவச மிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.

எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 9, பிராட்வே, சென்னை.

வர்த்தமானம்

ஜனசமூக முன்னேற்றத்திற்கென முயன்றும் எழுதியும் வருகின்ற பெட்ரண்ட் ரஸ்ஸில் என்னும் ஆங்கிலேயர், இங்கிலாந்தில் பரிட்சார்த்தமாக ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவியுள்ளார். 4வயது முதல் 11வயது வரையிலுமுள்ள சிறுவரும், சிறுமியரும் அப்பள்ளியில் பயின்று வருகின்றனராம். பிள்ளைகள் இஷ்டமிருக்கும் பொழுது படிக்கலாமாம். அப்பள்ளியில் தண்டனைமுறை இல்லை. உஷ்ணகாலங்களில் எல்லோரும் நிர்வாணமாக விருக்கலாம். ஆணும் பெண்ணும் ஒன்றாக ஆடையின்றி ஸ்நாநம் செய்யலாம், ஒன்றாக உறங்கலாம், இப்பள்ளியில் மதம் போதிப்பது கிடையாது.மாந்தர் தளையொன்றுமிலாது சுதந்திரத்துடன் வாழப் பயிற்றுவிப்பதே இப்பள்ளியின் நோக்கமாம்.

***

காந்தி இர்வின் உடன்படிக்கையின்படி கூடவிருக்கும் இரண்டாவது வட்டமேஜைமஹாநாடு அக்டோபர் மாதத்தில் நடைபெறுமென்றும் அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்றும் தெரிகின்றது.

***

காந்தி அடிகள் பிரதமமந்திரிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார் என்றும் அக்கடிதத்தை லார்ட் இர்வின் கொண்டுபோயுள்ளார் என்றும் பரவிய வதந்தி பொய் யெனத் தெரிகின்றது. ஆங்கிலம் பேசும் படக்காட்சிப் பிரதிநிதிக்கு காந்தியடிகள் தாம் எழுத்துமூலம் ஒரு செய்தியும் மந்திரிக்கு அனுப்பியதில்லை என்று கூறியுள்ளார்.

***

அகில இந்திய கதர்க் கார்யாலயத்தார் கதர் வளர்ச்சிக்கெனக் கதர் விலையைக் குறைத்துள்ளார். மேமாதம் முதல் கஜத்திற்கு ½ அணு குறைக்கப்படும் என்று கதர்க்கார்யாலய அறிக்கை கூறுகின்றது.

***

காந்தியைப் பகிஷ்கரிக்க லாக்கர் லாம்ஸன் என்பவர் இங்கிலாந்தில் பிரசாரம்செய்ய ஆரம்பித்து விட்டதாகப் 'ப்ரீ ப்ரெஸ்' தந்தி சொல்லுகிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அனுஷ்டித்து வருகிற முறையை அவர் கடுமையாகக் கண்டித்தாராம். சபையோர் தம்முடன் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். காந்தியைக் கூப்பிடக் கன்ஸர்வேட்டிவ் கட்சியினர் உட்கையாக இருக்கக் கூடாதென்றும் காந்தி இங்கிலாந்துக்கு வராமற் செய்யச் சபையோர் தமக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் கூறினராம்.

***

இங்கிலாந்தில் வெள்ளையருக்கும் கருப்பு ஜாதியினருக்கும் அதிக நட்பு ஏற்படுத்தும் உத்தேசத்துடன் ஒரு கூட்டுச் சபையை ஆரம்பிக்க ஸர். பிரான் ஸிஸ் யங்ஹஸ்பண்டின் தலைமையில் சென்றவாரம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிறத்தடையைப் போக்கடிப்பது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. மிஸ்டர் சார்லஸ் போடன் பவல் பேசுகையில் கருப்பு ஜாதியினரிடையே இப்பொழுது ஏற்பட்டுவரும் தேசீய உணர்ச்சியைப் புறக்கணிப்பது சாத்தியமில்லை யென்றும் இதைத் தீர்க்க முய[illegible] கூறினராம்.

மதுரை போதிநாயக்கனூர் வாசியான ஸ்ரீமான் S. K. இராமஸ்வாமி செட்டியார் அவர்கள் நமக்கு அனுப்பிய நேரிசை வெண்பா:—

கலாநிலயக் காரிகைதன் கற்புக் கமழ்ந்தின்
றுலாவு முயர்வுநன் றோங்க—எலாவிடத்தும்
பாராட்டிப் பண்புடனே போற்றுவாம் பாரதனில்
சீராட்டுஞ் செந்தமிழைச் சேர்ந்து.

செந்தமிழி னீர்மை சிறப்பொன் றிலங்கச்செய்
பந்தமில் பாக்களைப் பாங்குடனே—வந்தென்றும்
இன்புற் றியங்கு மெழில்சேர் கலாநிலயம்
அன்புடனே வாழ்க அலர்ந்து.

இங்கிலாந்தில் விஷக்காற்று ஆராய்ச்சிக்காக 6 கோடி செலவழிக்கப் பெற்றுளதெனத் தெரிகின்றது.

***

விடுதலைபெற்றுள சீனுவில் 18 லட்சம் பேர்கள் வேலையில்லாது கஷ்டப்படுகின்றனரெனச் சீனச் செய்தி கூறுகின்றது.

***

அராஜக இயக்கத்தைக் கண்டித்துக் காந்திஅடிகள் தமது பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகின்றார்:—

புரட்சிக்காரர்களின் செய்கைகளால் சுயராஜ்யம் சீக்கிரமாகக் கிட்டி விடாது. அவர்களின் பலாத்காரத்தால் ராணுவச் செலவு அதிகப்படுகிறது. இதனால் கவர்ன்மெண்டாரிடம் பழிக்குப்பழி வாங்கும் சுபாவமே அதிகப்படுகிறதே தவிர, நன்மை ஒன்றும் ஏற்படுகிறதில்லை.

அராஜகக்கொலைகள் எங்கெங்கு நடந்தனவோ, அங்கங்கு ஜனங்களின் நன்னெறி கெடுகின்றது. அவர்கள் செய்கைகளால் எவ்விதத்திலும் பொது ஜனங்களின் கண்விழிப்பு ஏற்படுவதில்லை. பொது ஜனங்களிடம் கெடுதியையே உண்டுபண்ணுகிறது. அராஜகக் கொலைகளால், கவர்ன்மெண்டார் கோபத்திற்கு அவர்களும் ஆளாவதுடன், அதிக வரி பெரு நஷ்டம் ஆகிய தொல்லைகள் அதிகப்படுகின்றன.

அகிம்சா தர்மத்தால் ஏற்பட்ட பலனைப் பிரத்தியட்சமாய்ப் புரட்சிக்காரர்கள் அறிந்திருக்கிறார்கள். புரட்சிக்காரர்களின் செய்கைகள் வியாதியைப்போல் பரவினாலும் அகிம்சா எண்ணங்கள் அதிகமாய்ப் பொது ஜனங்களிடம் ஊடுருவிச் சென்றிருக்கின்றது.

***

பாரதி:—மதுரை உத்தம பாளையத்தில் நடந்துவந்த பாரதி யென்னும் தேசிய மாதப்பத்திரிகை, அச்சுக் கூடச் சட்டத்தால் இடையில் நிற்க நேர்ந்தது. பின் அது நவீன பாரதியாய் மாறி நடைபெற லாயிற்று. அது இம்மாதம்முதல் மீண்டும் பாரதியாய் வெளி வரும். சிறையினின்று வெளிவந்துள 'பாரதி' ஆசிரியர் ஸ்ரீமான் ரா. நாயணஸ்வாமி செட்டியார் அவர்கள், மீண்டும் ஆசிரியப் பதவியை ஏற்றுளார் என்னும் செய்தியைப் 'பாரதி'யின் நேயர் அறிய மகிழ்வார்கள். தனது தேசீயக்கொள்கையோடு, நாட்டு நலத்திற்கென [illegible]க்கமொடு பாரதி இனியும் முயன்றுவரும் என்பது [illegible]ர்களால் பாராட்டப்படற்குரிய தொன்றே.

188915

KALANILAYAM. Reg. No. M. 2324.

:: பிரபல ஜோதிஷர் ::

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ- 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

கலா நிலய முன்னைய இதழ்கள்

மூன்றாண்டு இதழ்களும் பயிண்டுசெய்தும் செய்யாமலும் கிடைக்கும்

முதல் ஆண்டு:—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனார் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

இரண்டாமாண்டு:—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பால காண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆப பல அரிய கட்டுரைகள்.

மூன்றுமாண்டு:—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. **10—0—0**, வெளிநாடு ரூ. **11—8—0**.

(தபால் சார்ஜ் உள்பட.)

விலாசம்:—

கலா நிலயம், புரசைபாக்கம், சென்னை.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ.	18—0—0
காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்)	10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது.	6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

காலஞ்சென்ற எம். ஸி. நஞ்சுண்டராவின்
இணையற்ற மருந்துகள்
பண்டாரம்ஸ் மூலிகை மாந்த எண்ணெய்.

தாய்மார்களிடம் இம்மருந்து அவசியம் இருக்க வேண்டும். குழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்களுக்கு யாதொரு பயமுமின்றிக் கொடுக்கக்கூடிய பேதிஎண்ணெய் இதுவே. வயிற்று ஜீரணகாரிகளில் ஏற்படும் கோளாறுகளே குழந்தைகளுக்கு ஏற்படும் வியாதிகள் பலவற்றிற்கு முக்கிய காரணம். இவ்வியாதிகளை நீக்குவதில் இம் மாந்த எண்ணெய் இணையற்றது. இந்த எண்ணெயை உபயோகித்துவரக் குழந்தைகளுக்கு யாதொரு வியாதியும் அணுகா. ஒரு அவுன்ஸ் புட்டி அணா 12.

விபர காட்லாக் இனும்.

எம். ஸி. என்ஸ். எக்லிக்டிக்
பார்மஸி & டிஸ்பென்ஸரி,
49. சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T.N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A. B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலா நிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)